Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மாசி 14 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்ஹிஜ்ஜா 23 (26.02.2003) புதன்கிழமை இதழ் :147

English Academy

Email: thangan 672002 @ yahoo.com
T.P. - 021-2222588

210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
பிரதான வீதி, சித்தன்கேணி.

உங்கள் பிள்ளைகளுக்கு
சிறந்த இடம்
Better Place For Your Children

(சி-569)

# காங்கேசன் ஊறணி அந்தோனியார் உற்சவத்துக்கு படைத்தரப்பு அனுமதி!

## ஆயரின் கோரிக்கைக்கு யாழ். படைத் தளபதி சம்மதம்

(யாழ்ப்பாணம்)

**கடந்த பன்னிரண்டு ஆண்டு காலமாக உற்சவங்கள் ஏதும் நடைபெறாது காங்கேசன்துறை அதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருக்கும் ஊறணி அந்தோனியார் ஆலய உற்சவத்தை எதிர்வரும் ஜூன் மாதத்தில் நடாத்தவும், அக்காலப் பகுதியில் பொதுமக்கள் அங்கு சென்று வழிபடவும் இராணுவத் தரப்பினர் அனுமதி வழங்கியுள்ளனர்.**

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேலாக மேற்படி ஆலயத்துக்கு பொதுமக்கள் சென்று வழிபட முடியாதநிலை உள்ளது. அப்பகுதி முழுவதும் உயர் பாதுகாப்பு வலயமாக படைத்தரப்பினரால பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது.

நேற்று ஆயர் இல்லத்துக்கு திடீர் விஜயம்செய்த யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் கவனத்துக்கு இவ்விடயம் கொண்டுவரப்பட்டது.

யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், யாழ். தளபதியிடம் இவ்விடயம் குறித்து கோரிக்கையை முன்வைத்தார்.எதிர்வரும் ஜூன் மாதம் பதின்மூன்றாம் திகதி மேற்படி

(10 ஆம் பக்கம் பார்க்க)



யாழ். வந்த ஆயர்களுடன் படைத் தளபதிகள் சந்திப்பு. உள்ளே - சந்திப்புக்கு வரும் படைத் தளபதிகள்.

## விண்ணாணம் விநாசியர்



ஊறணியானிட்ட மட்டுமில்ல ஊருக்கும் போகவும் கிடைக்கவல்லே வேணும்..!

# யாழ். தளபதியுடனான சந்திப்பில் படையினர் நிலைப்பாடு அறிந்தோம்

## கொழும்பு ஆயர் ஒஸ்வால் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த கத்தோலிக்க திருச்சபையின் ஒன்பது மறை மாவட்டங்களின் ஆயர்களையும் யாழ். இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா சந்தித்துப் பேசியுள்ளார்.

நேற்று நண்பகல் யாழ். ஆயர் இல்லத்துக்கு விஜயம்செய்த யாழ். இராணுவத் தளபதி, ஆயர்களைச் சந்தித்து யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலைவரம் குறித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

சுமார் ஒருமணி நேரம்வரை இச் சந்திப்பு நீடித்தது. கொழும்பு மறை மாவட்டம், குருநாகல் மறை மாவட்டம், யாழ். மறை மாவட்டம் ஆகியவற்றின் ஆயர்களுடன், யாழ். இராணுவத் தளபதி முக்கியமான விடயங்கள் குறித்து தனியாகச் சந்தித்து உரையாடினார்.

விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## செய்தியாளர்களுக்கு கட்டுப்பாடு

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான அடுத்த கட்டப் பேச்சுக்களில் முக்கியமானதும், இரகசியமானதுமான விடயங்கள் ஆராயப்படவிருப்பதால், ஊடகவியலாளர்கள் மீது கட்டுப்பாடுகளை விதிக்க நோர்வே தீர்மானித்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

அடுத்த சுற்றுப் பேச்சுக்களில்-சமஷ்டி மற்றும் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக ஆராயப்படவுள்ளன. ரோக்கியோவிலுள்ள 'ஹொலிடே றெசோர்ட் ஹெகோன்' என்ற விடுதியிலேயே பேச்சுக்கள் நடக்கவுள்ளன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# நெருக்கடிகளைத் தவிர்க்க கருணா – ஒஸ்ரின் சந்திப்பர்

(கொழும்பு)

கிழக்குப் பிரதேசத்தில் எழுந்துள்ள நெருக்கடிகளைத் தீர்க்குமுகமாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ, விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கருணா ஆகியோர் சந்திப்பொன்றை நடத்த விருப்பதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம்பெறும். பாதுகாப்புப் படையினரால் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களையும், இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்குச் சென்ற போது கைதுசெய்யப்பட்ட படைத்தரப்பு வீரர்களையும் பரஸ்பரம் விடுதலை செய்வது குறித்து இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# அர்ப்பணிப்புமிக்க போராட்டமே இன்றைய நிலைக்கு காரணம்!

## பளை பேராளர் மாநாட்டில் சு.ப.தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

தற்போதைய சூழ்நிலை, விடுதலைப் புலிகளின் நீண்ட அர்ப்பணிப்புமிக்க போராட்டம் மூலமே கிடைத்ததொன்றாகும். பதினெட்டாயிரத்துக்கும் மேற்பட்ட இளந்தலைமுறையினர், ஆயிரக்கணக்கான மக்கள், பெருமளவு வளமான பிரதேசம் என்பவற்றை இழந்தே இன்று இந்த நிலைக்கு வந்துள்ளோம். எனவே, இவற்றை நாம் சாதாரணமாக நினைத்துவிடக்கூடாது என அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

நேற்று பளை மத்திய கல்லூரியில் நடைபெற்ற தமிழீழ எழுச்சிப் பேரவையின் பேராளர் ஒன்றுகூடல் மாநாட்டில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். நிகழ்வின் ஆரம்பத்தில் மாவீரர் சோதியாவின் தந்தை முதன்மைச் சுடரினை ஏற்றிவைத்தார். தமிழ்ச்செல்வன் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அரசியல் பொறுப்பாளர், இன்றைய இந்த நிலைமை உருவாக தியாகமும், அர்ப்பணிப்பும் நிறைந்த விடுதலைப்போரேதான் காரணம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விளையாட்டு விழா இறுதிநாள் போட்டிகள்

# வெற்றிக்கிண்ணங்களை திருமலை அணி சுவீகரிப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ தேசிய விளையாட்டு விழா - 2003 இன் இறுதி நாள் விளையாட்டுப் போட்டிகள் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் நேற்றுக்காலை 8.30 மணியளவில் ஆரம்பமாகியது.

இதன்போது தேசியக்கொடியினை தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பா ஏற்றி வைத்தார்.

மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த மாவீரர் நினைவு மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த கேணல் சங்கரின் திருவுருவப் படத்திற்கு வட - கிழக்கு மாகாண முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவரட்ண

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஒரே கொடியின் கீழ் அணிகள்; எமது தேசியத்துக்குப் பெருமை!

## தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்

(கிளிநொச்சி)

தமிழர் தாயகத்திலுள்ள எட்டு மாவட்ட அணிகளையும் ஒரே கொடியின் கீழ் விளையாடவைத்த நிகழ்வு எமது தேசியத்துக்குக் கிடைத்த பெருமை என, தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்றுடன் முடிவடைந்த தமிழீழ தேசிய பெரு விளையாட்டுப் போட்டியின் பரிசில்கள் வழங்கும் நிகழ்வில் சிறப்புரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்தும் பேசுகையில்:-

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் உடல், உள வலிமையைக் கட்டியெழுப்பக் கிடைத்த சந்தர்ப்பம் இத்தேசிய விளையாட்டு விழா எனச் சுட்டிக்காட்டினார்.

அம்பாறை மற்றும் சில மாவட்டங்களிலிருந்து கலந்துகொண்ட சிங்கள

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஆசிரிய நியமனத்துக்கு 346 பேர் தெரிவாகினர்

வட - கிழக்கு மாகாணத்தில் தமிழ்ப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக, 1999 ஆம் ஆண்டு கோரப்பட்ட விண்ணப்பங்களின் பிரகாரம் நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சையின் அடிப்படையில் 346 பேரின் பெயர் விபரங்கள் கல்விச்சேவைகள் ஆணைக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

அனுமதி கிடைத்தவுடன் நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கபடுமென, வட- கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டு, விளையாட்டுத்துறை அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் எம்.கே. ஹனிபா தெரிவித்துள்ளார்.

SERENDIB AIRLINE யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-390128.
(சி-518)

# ஐ.தே.மு. அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு பேய் பிசாசுகளுடன் இணையவும் தயார்

## பொ.ஐ.மு. எம்.பி. கூறுகிறார்

ஆட்சியிலுள்ள ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைப் பதவியில் இருந்து வீழ்த்த, நான் எந்தப் பேய் பிசாசுகளுடனும் இணையத் தயார் என்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்திருக்கின்றார்.

மாத்தளையில் சுதந்திரக்கட்சி புனரமைப்புக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு உரையாற்றி அவர்,

ஐ.தே.மு. ஆட்சி மீது மக்கள் வெறுப்படைந்துள்ளனர். ஜே.வி.பியும் பொ.ஐ.முவும் இணைந்தால், ஐ.தே.மு. அரசாங்கத்தை மண்கவ்வச் செய்வது சுலபம். அத்தகைய நிலைமை மிகவிரைவில் ஏற்படும்.

சுதந்திரக்கட்சிக்குள் ஏராளமான குத்து வெட்டுக்கள் இன்றும் நடந்து கொண்டிருக்கின்றன. எனினும், ஐ.தே.க. ஜென்மவிரோதி என்ற நிலைப்பாட்டில் அனைவரும் உறுதியாக உள்ளனர்.

இநத அரசாங்கத்தைக் கலைகக ஜனாதிபதி சந்திரிகாவை வற்புறுத்தும் பொறுப்பு கட்சியிலுள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் உள்ளது. அனைவரும் செயலில் இறங்க வேண்டிய நேரம் வந்துள்ளது.

எதிர்வரும் மார்ச் 10 ஆம் திகதி 10 லட்சம் மக்களைத் திரட்டி நாம் கொழும்பில் மிகப்பெரிய பேரணியை நடத்தவுள்ளோம். இதில் மேலும் 5 லட்சம் ஜே.வி.பி. ஆதரவாளர்களும் இணைந்து கொள்வர். ஐ.தே.கவினருக்குப் பதிலடி கொடுப்பதற்கு நாம் தயாராகி வருகின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதி சந்திரிகா இருக்கும்வரை கௌரவமான அரசியல் நடத்த முடியாது

## பந்துல குணவர்த்தன விசனம்

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி, பாலர் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களைப் போலவே நாடாளுமன்றத்தில் நடந்துகொள்கின்றது. ஜனாதிபதி சந்திரிகா இருக்கும்வரை கௌரவமான அரசியல் புரிவது கஷ்டமான செயல்.

- இவ்வாறு கிராமிய பொருளாதார அமைச்சரும் பிரதி நிதியமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணி, இடதுசாரிகளுக்கும் இழுக்கை ஏற்படுத்தும் விதத்தில் செயற்படுகின்றது. அவர்கள் நாட்டைக் குட்டிச்சுவராக்கிய 1988, 89 ஆம் ஆண்டு காலப்பகுதியில் - அவர்களால் கொலை செய்யப்பட்டவர்களின் சடலங்களை, முழங்காலுக்கு மேலே தூக்கிச் செல்லக் கூடாதென்று கூறியவர்கள். எனவே, உலகின் மிலேச்சத்தனமான பயங்கரவாதிகளாகத் திகழ்ந்தவர்கள மக்கள் விடுதலை முன்னணியினரே என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குருநாகலில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றிலேயே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

# இரசாயனக் கழிவுடன் வந்த கப்பல்; விசாரணை நடத்தக் கோரிக்கை

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தில் இரசாயனக்கழிவுகளுடன் கப்பல் பிரவேசித்தமை தொடர்பாக, பூரண விசாரணைகள நடத்தப்பட வேண்டும் என்று இலங்கைச் சுற்றுச்சூழல் சங்கம் அரசாங்கத்திடம் கேட்டுள்ளது.

எல்ரி.கிராண்ட் என்ற கப்பல் சீனாவில் இருந்து ஈராக் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது - தீப்பிடித்ததாகக் கூறி கொழும்புத் துறைமுகத்தில் நுழைந்திருந்தது. இதிலிருந்து பல இரசாயனக்கழிவுகள் அடங்கிய கொள்கலன்கள் கொழும்புத் துறைமுகத்தில் இறக்கப்பட்டன.

இவற்றுள் 15 கொள்கலன்கள் காணாமற்போய்விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தக் கொள்கலன்களில் அணுக்கழிவுகள் இருப்பதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன. ஆயினும், துறைமுகங்கள், கப்பறதுறை அமைச்சு இதனை மறுத்திருந்தது.

கொள்கலன்களில் கிருமி நாசினிக் கழிவுகளே இருந்ததாகவும் மேற்படி அமைச்சு தெரிவித்திருந்தது. இந்த இரசாயனக் கழிவுப் பொருட்கள் இலங்கையின் சுற்றுச்சூழலுக்கு ஒவ்வாதனவென்றும், இதனால் பல பாதிப்புக்கள் ஏற்படும் எனவும் சுற்றுச்சூழல் சங்கம் எச்சரித்துள்ளது.

இதனால் முழு விசாரணை ஒன்றை நடத்த அரசாங்கம் உத்தரவிட வேண்டும் என்றும, மேற்படி கழிவுப் பொருட்களை அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் மூலம், பரிசோதனை செய்து அறிக்கை பெறப்பட வேண்டும் என்றும் சுற்றுச்சூழல் சங்கம் கேட்டுள்ளது.

அத்துடன், இந்தக் கப்பல் எங்கிருந்து புறப்பட்டது, எங்கு சென்று கொண்டிருந்தது என்பன போன்ற விடயங்கள் சர்வதேசப் பொலிஸாரின் உதவியுடன் ஆராயப்பட வேண்டும் என்றும் அணுக்கதிர் வீச்சுள்ள பொருட்கள் கொள்கலனில் உள்ளதா என்பது குறித்து விரிவான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் சுற்றுச்சூழல் சங்கம் அரசாங்கத்தை மேலும் கோரியுள்ளது.

# புகையிரதப் பாதையில் குடியிருப்புக்கள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடம் மகாவித்தியாலயத்திற்கு அருகிலுள்ள புகையிரத பாதைப்பகுதியில் புதிதாகக் குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணம் மடம் வீதிக்கு அருகாமையில் உள்ள புகையிரதப் பாதைப்பகுதியிலேயே இக் குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நல்லூர் பிரதேச சபையால் மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்

(நல்லூர்)

நல்லூர் பிரதேசசபை எல்லைக்குள் வசிக்கும் 2000, 2002 ஆம் ஆண்டு க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவானவர்களுக்கும், 2002 ஆம் ஆண்டு, 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கும் நல்லூர் பிரதேசசபையினால் நன்கொடை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தகுதியுடையவர்கள் தகுந்த ஆதாரங்களுடன் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பிரதேசசபைத் தலைமைக் காரியாலயத்தில் பெறலாம் என்றும நல்லூர் பிரதேசசபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.



செவிப்புலன் வலுவற்றோர் நிறுவன 21 ஆவது ஆண்டுவிழாவின்போது மாதர் தையல் கழகத்தினை திறந்துவைத்த, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசாவையும், அவரின் இடதுபுறமாக கொழும்பு தெற்கு றோட்டறிக்கழகத் தலைவர் P. தயாபரன் மற்றும் வலதுபுறம் செவிப்புலன் வலுவற்றோர் சங்கத்தலைவர் சே.செல்வக்குமார் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# சுதந்திரக்கட்சிக் கூட்டத்தில் கல்வீச்சு

(கொழும்பு)

அக்மீமனவில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது - பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்களால் கற்கள் வீசி தாக்குதல் நடத்தப்பட்டது.

அக்மீமன தொகுதியின் சுதந்திரக்கட்சி அமைப்பாளர் நந்தா குணசிங்கவின் வீட்டில் - கூட்டம் நடந்து கொண்டிருந்தபோதே கற்கள் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் சிலர் காயமடைந்தனர்.

# சட்டக்கல்வி போதனை முழுமையாக ஆங்கிலத்தில்

## 2010 இல் அமுலாகும்

இலங்கையில் சட்டக்கல்வி முழுமையாக ஆங்கிலத்தில் கற்பிக்கப்படவுள்ளதாக சட்டத்தரணிகள் சங்கச் செயலாளர் சாலிங்க இங்கதிஸ்ஸ தெரிவித்தார்.

சட்டக் கல்வியை ஆங்கிலத்தில் கற்பிப்பதற்கான நடைமுறைகள் குறித்து ஆராய, சிரேஷ்ட சட்டத்தரணிகள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது. இப்போது சில பாடங்கள் மட்டுமே ஆங்கிலத்தில் கற்பிக்கப்படுகின்றன.

2010 ஆம் ஆண்டில் அனைத்துப் பாடங்களும் ஆங்கிலத்திலேயே கற்பிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.


## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

சிவலிங்கம் ஞானசேகர் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல.690132375 V), விசேட அடையாள அட்டை என்பன கடந்த 10.02.2003 அன்று சுன்னாகத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைத்து உதவவும். (260)

### ENGLISH CLASSES

**O/L, A/L, G.A.Q., B.A.** மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஆங்கிலம் இலகு முறையில். ஆரம்பம் 01-03-2003 (புதிய இடத்தில்) K.சோமசுந்தரம், சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (சி-615)

ராஜா யாழ்ப்பாணம்.

7 ஆவது ஜனத்திரள் வாரம்



விஜய், ஸ்நேகா, மணிவண்ணன், வடிவேல் நடித்த

வசீகரா

2.30, 6.30 மட்டும்

கொழும்பில் பலவாரங்கள் காண்பிக்கப்பட்ட விஞ்ஞான அறிவியலூட்டும் சிறந்த ஆங்கிலத்திரைப்படம்.

SPIDER MAN காலை 10.30

இன்று கடைசி தினம். இரவு 9.30

(சி-545)

நிறைஞ்சனாஸ் சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

விஜய், சிம்ரன் நடித்த

ப்ரியமானவளே

வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 காட்சி

M.I. 2

(சி-544)

## கள மொழிபெயர்ப்பாளர்கள் தேவை

வன்னியில் இயங்கிவரும் கண்ணிவெடியகற்றும் தொண்டு நிறுவனத்திற்கும், விழிப்புணர்வுப் பணிகளுக்கும் கள மொழிபெயர்ப்பாளர்கள் தேவ்வப்படுகின்றனர்.

தகுதி உடையவர்கள் எதிர்வரும் மார்ச் 05 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

விளம்பர இல - 09
மே/பா "நமது ஈழநாடு"
இல 267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

(258)

வயதெல்லை :- 20 - 40 வயது
சம்பளம் :- ஆகக் குறைந்தது 9000 ரூபா
ஏனையவை பேசித் தீர்மானிக்கப்படும்

தொடர்புகளுக்கு:- Fax :- 021-2223947


# இன்றைய நாள் இனிய நாள்

## 26-02-2003 - புதன்கிழமை

மேடம் :- தேகசுக்க்குறைவு, அதிக பிரயாசம், பிரயாணக் கஷ்டம், பலவழிகளிலும் செலவுகள்.

இடபம் :- குடும்ப சந்தோஷம், தனதானிய விருத்தி, இனசனக் கொண்டாட்டம்.

மிதுனம் :- குடும்பானுகூலம், புதிய ஸ்தானம், பொருள் வரவு, தாரபுத்திர சுகம்.

கர்க்கடகம் :- பயனற்ற பிரயாசம், ஏமாற்றப்படுதல், பொருட்சேதம், தொழிற்குறைவு.

சிங்கம் :- இனசன விரோதம், கோபமிகுதி, புதிய ஸ்தானம், இலட்சுமீகரம்.

கன்னி :- தனலாபம், தாரபுத்திர சுகம், தொழில் சமம், தரும காரியம் செய்தல்.

பிரபல சோதிடர் எஸ்.குகநேசன

துலாம் :- வாக்குக்கலகம், தேகசுகக் குறைவு, காரியானுகூலம், நற்கீர்த்தி.

விருச்சிகம் :- தனலாபம், வாக்கு வசீகரம், தரும காரிய சித்தி, காரிய விக்கினம்.

தனு :- இல்லச்சிறப்பு, களஸ்திர சுகம், பெண்களால் நன்மை, பொருள்வரவு.

மகரம் :- காரிய சித்தி, பிரயாணத்தால் நன்மை, பெரியோர் மதிப்பு, மனமகிழ்ச்சி.

கும்பம் :- நினைத்த காரியம் சித்தி, அதிகார விருத்தி, பூமியால் லாபம், பொருள் வரவு.

மீனம் :- நற்குண விருத்தி, காரிய சித்தி, தொழில் விருத்தி, மனச்சந்தோஷம்.

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசு தீவிரமாக முயற்சிக்கிறது

## ஜனாதிபதி மலேசியாவில் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசாங்கம் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

- இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் - மலேசியாவில் ஆரம்பமான அணிசேரா நாடுகளின் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- யுத்தநிறுத்த உடன்படிக்கை ஓராண்டு நிறைவு பெற்றாலும், பல கஷ்டங்கள் மத்தியில் பேச்சுக்கள் தொடர்கின்றன.

அங்கத்துவ நாடுகளிடையே தொடர்ந்து இடம்பெறும் ஆயுதத் தகராறுகள், சர்வதேசப் பயங்கரவாதம என்பவற்றுக்கான காரணங்களைத் தீவிரமாக ஆராய்ந்து தீர்வு காண்பதற்கு இந்த அமைப்பு முயற்சிக்கவேண்டும்: அத்துடன், பயங்கரவாதத்திற்கும் புரட்சிக்கும் - சர்வதேசம் தெளிவான வரையறைகளை வகுத்துக்கொள்ளவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஐக்கிய நாடுகளின் அங்கீகாரம் இல்லாமல் இறையுரிமை கொண்ட ஈராக் அரசு மீது தலையீடு செய்யக் கூடாது என்ற கோட்பாட்டை தெளிவாக இலங்கை கொண்டிருக்கிறது என்றும் மேலும் ஜனாதிபதி தெரிவித்தார். (01)

# புரிந்துணர்வு உடன்படிக்கை ஒரு கண்துடைப்பு நடவடிக்கை!

## தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் பேரவை

வடக்கு - கிழக்கு மக்களைப் பொறுத்தவரை சமாதான - புரிந்துணர்வு உடன்படிக்கை ஒரு கண்துடைப்பு நடவடிக்கையாகும். சமாதானத் தாகத்தில் தவித்துக்கொண்டிருந்த வடக்கு - கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களுக்கு வெறும் கானல் நீராகவே இந்த ஒப்பந்தம் அமைந்துவிட்டது.

- இவ்வாறு அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஓராண்டு நிறைவாக இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் பேரவையின் சார்பில்- பேரவைத் தலைவர் ஏ.எல். தவம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பிறகு காஞ்சிரங்குடா, திருகோணமலை போன்ற இடங்களில் அப்பாவித் தமிழ் மக்களின் இரத்தம் சிந்தப்பட்டிருக்கிறது. அதேபோல் வாழைச்சேனை, மூதூர் பகுதிகளில் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்ட கோரப் படுகொலைகளும், பொருளாதார அழிவுகளும் இந்த உடன்படிக்கை அமுலிலிருந்த காலகட்டத்திலே இடம்பெற்றிருக்கின்றன.

எனவே வடக்கு-கிழக்கில் சமாதானத்திற்காகத் தவித்துக் கொண்டிருந்த தமிழ்-முஸ்லிம் மக்களுக்கு அமைதியைக் கொண்டுவரும் எதிர்பார்ப்பும் இவ்வுடன்படிக்கைக்குக் கிடையாது எனவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.(01).

# வவுனியாவில் இருந்த யாழ்.வாசியை இரு வாரங்களாகக் காணவில்லை

## மனிதஉரிமை ஆணைக்குழுவில் புகார்

(நமது நிருபர்)

வவுனியாவில் வசித்து வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரைக் கடந்த இரண்டு வாரங்களாகக் காணவில்லையென யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராசு இராசேந்திரம் (வயது 28) என்பவர் கடந்த ஆண்டு முதல் வவுனியாவில் வசித்து வந்தவரெனவும், இவர் கடந்த 15 ஆம் திகதி வீட்டிலிருந்து கடைக்குச் சென்றவர், இதுவரை வீடு திரும்பவில்லை எனவும் மனிதஉரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# லஞ்ச ஊழல் ஆணையாளரை நாளை குற்றப் புலனாய்வுப் பொலிஸ் விசாரிக்கும்

(கொழும்பு)

குற்றப் புலனாய்வுப் பொலிஸார் முன்னிலையில் நாளை வியாழக்கிழமை ஆஜராகுமாறு லஞ்ச ஆணைக குழுவின் ஆணையாளர் கிங்ஸ்லி விக்கிரமசூரியாவுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆணையாளருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரணைசெய்த கோட்டை நீதிவான் - ஆணைக்குழுவின் புலனாய்வுப்பிரிவைச் சேர்ந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், சி.கே.குணதிலகவை இன்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.

இது தொடர்பான விசாரணைகளை நடத்திவரும் பொலிஸ் உத்தியோகத்தர்களான சரத் நந்தசேன, ஜி.கே.குணதிலக ஆகியோர் மீது சட்டவிரோதமாகச் செல்வாக்குப் பிரயோகிக்கப்படுகிறதென்று அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா-சி.ஐ.டியினருக்குச் செய்த முறைப்பாட்டின்பேரில் விசாரணைகள் நடைபெறுகின்றன.

# மன்னார்-புத்தளம் வீதி திருத்தம்; திருமலைக் கூட்டத்தில் ஆராயப்படும்

மன்னார் - புத்தளம் வீதியைத் திருத்தி அமைப்பது தொடர்பாகத் திருகோணமலையில் நடைபெறவுள்ள வட-கிழக்கின் உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான உபகுழுவின கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

மன்னார் - புத்தளம் வீதியைத் திருத்தம் செய்து, மீண்டும் போக்குவரத்துச் செய்ய அனுமதிப்பதற்கு 40 கோடி ரூபா தேவைப்படுவதாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

திருகோணமலையில் புனர்வாழ்வு உபகுழுவின் கூட்டம் நாளையும, நாளைமறுதினமும் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரியவருகின்றது.

# வளைகுடா போரில் வேலையிழந்த மேலும் 1600 பேருக்கு நஷ்டஈடு

1991 இல் வளைகுடா யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கையரில் மேலும் ஒரு பகுதியினருக்கான நஷ்டஈடு வழங்கப்படவிருப்பதாகத் தொழிலமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் வைத்து ஆயிரத்து அறுநூறு பேருக்கு இந்த நஷ்டஈடு வழங்கப்படவிருக்கிறது. ஒவ்வொருவருக்கும் மூன்று லட்சம் ரூபா நஷ்டஈடாக வழங்கப்படவுள்ளது எனவும் அமைச்சர் மகிந்த சமரசிங்க மேலும் தெரிவித்தார்.

1991 இல் வளைகுடாவில் ஏற்பட்ட யுத்தத்தினால் ஆயிரக்கணக்கான இலங்கையர் தமது வேலைகளை இழந்து நிர்க்கதியாக நாடு திரும்பியிருந்தனர். இவர்களுக்குக் கட்டம் கட்டமாக நஷ்டஈடு வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

### பிரதமரின் இந்திய விஜயம்

இவ்வாரம் இந்தியா செல்லும் பிரதமர் ரணில், இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

27 ஆம் திகதி ஆரம்பமாகும் பிரதமரின் இந்திய விஜயம் அடுத்த மாதம் 2 ஆம் திகதிவரை நீடிக்கும் எனப் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### விளையாட்டு அதிகாரிகள் யாழ்.வருகின்றனர்

வட - கிழக்கு மாகாணசபையின் விளையாட்டு அதிகாரிகள் குழுவொன்று யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளது.

இவ்வார இறுதியில் வருகைதரவிருக்கும் இக்குழுவினர் சில தினங்கள் இங்கு தங்கியிருந்து விளையாட்டுத்துறை அபிவிருத்தி தொடர்பான விடயங்களைக் கவனிக்கவுள்ளனர்.

# இலங்கைக் கலைக்களஞ்சியம் கொழும்பில் வெளியிடப்பட்டது

இலங்கை பற்றிய முழுவிபரஙகளும் அடங்கிய கலைக்களஞ்சியம் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. இலங்கையின் வரலாறு, அரசியல், கலாசாரம் மற்றும் அனைத்துத் தகவல்களும் அடங்கியதாக இந்தக் கலைகளஞ்சியம் தொகுக்கப்படடிருக்கிறது.

கொழும்பில நடந்த விழாவில் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு இந்த நூலை வெளியிட்டுவைத்தார். லண்டனில் கொமன்வெல்த் தகவல் செயலாளராக இருந்த சி.ஏ.குணவர்த்தனா இந்தக் கலைக் களஞ்சியத்தைத் தொகுத்துள்ளார்.

புதுடில்லியில் உள்ள ஸ்ரேலிங பதிப்பகம் இந்நூலை வெளியிட்டிருககிறது.



உடுவெல என்ற இடத்தில் டபிள்யூ.கருணாதாச என்பவரது தோட்டத்தில் வாழைமரமொன்று அதிசயிக்கத்தக்க வகையில் நான்கு குலைகளுடன் இருப்பதைப் படத்தில் காணலாம்.

# ஒவ்வொரு இலங்கையருக்கும் 93 ஆயிரம் ரூபா வெளிநாட்டுக் கடன்

## சரத் அமுனுகம கூறுகிறார்

(கொழும்பு)

வெளிநாட்டு உதவிகள் வழங்கப்பட முன்னர், புலிகள் ஆயுதங்களைக களைவதாக உறுதிமொழி வழங்கவேண்டும் என்று பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

இலங்கைக்கு ஜப்பானிய நிதியுதவிகள் ஐ.தே.க. ஆட்சிக்கு வர முன்னரே வழங்குவதற்கு உறுதியளிக்கப்பட்டிருந்தது.

இப்போது இலங்கையர் ஒவ்வொருவரும் தலா 93 ஆயிரம் ரூபா கடன்காரராக உள்ளனர். இன்னும் ஒரு வருடத்தில் இந்தக் கடன் தொகை 1 லட்சத்து 8 ஆயிரமாக அதிகரிக்கும்.

ஜப்பானின் நிதியுதவி பெற்ற பல திட்டங்களை அரசாங்கம் இன்னமும் நிறைவு செய்யாமல் இருக்கின்றது. ஒதுக்கப்படும் நிதியில் 20 சதவீதம் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படாமல் வீணடிக்கப்படுகிறது.

ஏ-9 வீதி திருத்த வழங்கப்பட்ட 9 மில்லியன் டொலர் நிதி, சரியாகப் பயன்படுத்தப்படவில்லையென அவர் மேலும் தெரிவித்தார்.

# மின்சாரக் கட்டணங்களை தபாலகங்களிலும் செலுத்தலாம்

## வடமாகாண அஞ்சல் நாயகம் தெரிவிப்பு

(கொழும்பு)

மின்சாரப்பட்டியலுக்கான கட்டணங்களை தபால் நிலையங்களில் இனிமேல் செலுத்த முடியும். இந்த நடைமுறை உடனடியாக நடைமுறைக்கு வருவதாக வடமாகாண அஞ்சல் நாயகம் என்.ஜெயரட்ணம் தெரிவித்துள்ளார்.

மின்சாரம் பெறுவதற்கான கட்டணம் கடந்த காலங்களில் தபால் நிலையங்களின் ஊடாகச் செலுத்தப்பட்டு வந்தன. கடந்தகால யுத்த நடவடிக்கையினால் மின்சார சேவை பாதிப்படைந்ததையடுத்து இந்தச் செயற்பாடுகளும் தடைப்பட்டன.

தற்போது மின்சார விநியோகம் விஸ்தரிக்கப்பட்டுள்ளதையடுத்து மக்கள் மின்சாரக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு வங்கிகளை நாடவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. வங்கி வசதிகள் இல்லாத பகுதி மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தநிலைமை தொடர்பாகப் பொதுமக்களும், தொழிற்சங்கங்களும் விடுத்தகோரிக்கையையடுத்து அண்மையில் வடபிராந்திய மின்சாரசபைப் பொதுமுகாமையாளருடன் நடாத்திய கலந்துரையாடலை அடுத்து இந்த இணக்கம் எட்டப்பட்டது.

இதனையடுத்து மின்பாவனையாளர்கள் தமது கட்டணங்களைச் செலுத்துவதற்கு வசதியாக அந்தந்தப் பகுதிகளில் அமைந்துள்ள தபால், உபதபால் நிலையங்களில் மின்சாரக்கட்டணங்களைச் செலுத்துவதற்கான நடைமுறை உடனடியாக அமுலுக்கு வந்துள்ளது.

இதற்கான அறிவுறுத்தல்கள், பதிவேடுகள் சகல அஞ்சல், உப அஞ்சல் அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது - இவ்வாறு அஞ்சல் நாயகம் என்.ஜெயரட்ணம் தெரிவித்தார்.

(ச)

# இணைப்பு வேலைகள் முடிவடைந்தும்

# வடமராட்சியில் மின் விநியோகமில்லை

## அமைச்சருக்காகக் காத்திருப்பு

(யாழப்பாணம்)

வடமராட்சிப் பிரதேசத்தில் சில இடங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான வேலைகள் பூர்த்தியடைந்த போதிலும், அமைச்சர் ஒருவர் மினவிநியோகத்தை ஆரம்பித்து வைக்கவிருப்பதால் வீடுகளுக்கு மின்விநியோகம் வழங்கப்படாதிருப்பதாகத் தெரியவருகின்றது.

வடமராட்சிப் பிரதேசத்தின் கரையோரப் பகுதிக்கு இருபத்திநான்கு மணிநேரமும் மின்சாரம் வழங்குவதற்காக மின்பிறப்பாக்கிகள் பொருத்தி ஒருமாத காலமாகியும் இன்னமும் மின்சாரம் வழங்கப் படவில்லை.

இந்தப்பகுதியில் கடந்த சில வருடங்களாக ஜெனரேற்றர் மூலம் மட்டுப்படுத்தப்பட்ட நேரங்களில் மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு வழங்கப்படும் மின்சாரம் வலுக்குன்றியதாகவும், சீரற்றும் விநியோகிக்கப்பட்டு வருவதற்கு அந்தப்பகுதி மக்கள் கடும் அதிருப்தி தெரிவித்து வந்தனர். பல பொது அமைப்புக்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்து 24 மணி நேர மின்விநியோகத்திற்காக அப் பகுதியில் மின் இணைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தியடைந்து சுமார் ஒருமாத காலமாகியும் இந்தப்பிரதேசத்திற்கான இருபத்துநான்கு மணிநேர மின் விநியோகம் வழங்கப்படவில்லை.

குடாநாட்டில் ஆரம்பிக்கப்படவிருக்கும் மின்சார விநியோகத் திட்டத்தை எரிபொருள் மின் சக்தித்துறை அமைச்சர் கரு ஜெயசூரிய திறந்துவைக்கவிருப்பதாகத் தெரியவருகின்றது.

வலிகாமம் பகுதியில் மின்விநியோகத்தை வழங்குவதற்கான பணிகள் பூர்த்தியடையாததில் அமைச்சரை உடன் அழைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டங்களை இம்மாதம் இறுதிக்குள் முடிப்பதற்கான நடவடிக்கைகள் துரிதமாக நடைபெற்று வருவதுடன் அடுத்த மாத முற்பகுதியில் இந்தப் பிரதேசத்திற்கான மின்சாரம் வழங்கப் பட்டுவிடும் என அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ச)

### நல்லூரில் சொற்பொழிவு

நல்லூர் கந்தசுவாமி கோயில முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பி.ப.5.30 மணிக்கு 'அன்றாட வாழ்வில் ஆன்மீகம்' எனும் விடயம் தொடர்பாக ஸ்ரீராஜேஸ் பகவத் ராஜாஜி சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

### சீமெந்து தருமாறு கோரிக்கை

இணுவில் கந்தசுவாமி ஆலய மணிமண்டப புனரமைப்புப் பணிகளுக்காக- இணுவிலில் வசிக்கும் ஒவ்வொரு குடும்பத்தவர்களும் குறைந்தது ஒரு பக்கற் சீமெந்து தந்துதவுமாறு திருப்பணிச் சபையின் செயலாளர் கேட்டுள்ளார். (78)

### மத்தியூஸ் வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதி புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

நீண்டகாலமாகத் திருத்தம் செயயப்படாமல் இருந்த இவ்வீதி அப் பகுதி மக்களின் தொடர்ச்சியான வற்புறுத்தல்களையடுதது தற்போது புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

## சுகாதார சேவைப் பணிமனைகளில் விரைவில் நேரக் கணிப்புக் கருவிகள்

(நெல்லியடி)

யாழ்.சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனையில் அடுத்த மாதம் முதல் ஊழியர்களின் வரவைப் பதிவு செய்வதற்கு நேரக்கணிப்பு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட வுள்ளதாகத் தெரியவருகின்றது.

நேரக்கணிப்பு இயந்திரங்களைப் பொருத்தும் பணிகள் பூர்த்தி அடைந்துவிட்டன. இது செயற்பட ஆரம்பித்தால் ஊழியர்கள் - நேரம் பிந்திக் கடமைக்கு வருவதையோ அல்லது அலுவலகநேரம் முடிய முன்பே வீடு செல்வதையோ தடுக்க முடியும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

வெகுவிரைவில் யாழ். போதனா வைத்தியசாலை, மந்திகை மருத்துவமனை, சாவகச்சேரி மருத்துவமனை ஆகியவற்றிலும் இந்த நேரக்கணிப்பு இயந்திரங்கள் பொருத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (13)

# நீரிழிவு நோய் DIABETES

பகுதி 30 - ச.ஆ.கோபாலமூர்த்தி.

### நீரிழிவு நோயாளியை இனங்காணப் பயன்படுத்தப்படும் குருதிக்குளுக்கோஸ் அளவீடுகள்

கீழே தரப்பட்டுள்ள குருதிக்குளுக்கோஸ் அளவுகள் நீரிழிவு நோயாளரையும், நீரிழிவுநோயை நெருங்குபவரையும் (IMPAIRED GLYCEMIA) இனங்காணப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த அளவீடுகள் நாளக்குருதியைப் பரிசோதிக்கும்போது பெறப்படும் அளவீடுகளாகும். குருதிமயிர்க் குழாயிலிருந்து குருதியை எடுத்து, குளுக்கோமீற்றரில் சோதித்துப் பெறப்படும் முடிவுகள் இந்த அளவிடுகளைவிடச் சிறிது வேறுபடும். (10% இலிருந்து 20% வரை வேறுபடலாம் எனக் கூறுகிறார்கள்) 1.m.mol = 18 mப/dl

| நாளக்குருதிப் பரிசோதனை | அலகு | நீரிழிவு இல்லாதவர் | நீழிவை நெருங்குபவர் | குளிகையினால் கட்டுப்படுத்தக்கூடிய நீரிழிவுநோயாளி |
|---|---|---|---|---|
| FBS (உபவாச இரத்தப் பரிசோதனை) | m.mol | 6.1க்குக் கீழ் | 6.1 - 7.0 | 7.0க்கு மேல் |
| | mப /dl | 109.8 | 109.8 - 126 | 126 க்கு மேல் |
| PPBS (உணவின்பின் இரத்தப்பரிசோதனை) | m.mol | 7.8 க்குக் கீழ் | 7.8 - 11.0 | 11.0 க்கு மேல் |
| | mப /dl | 140.4 க்குக் கீழ் | 140.4 - 198 | 198 க்கு மேல் |

### புற்றுநோயும் நீரிழிவு நோயாளரும்

நீரிழிவு நோயாளருக்கு புற்றுநோய் ஏற்பட்டால் அது விபரீத விளைவுகளுக்கு இட்டுச் செல்லலாம். எனவே, புற்றுநோய் ஏற்படாது தடுத்தலும், முறையான பரிசோதனைகள் செய்து ஆரம்ப நிலையில் அதனைக் கட்டுப்படுத்தலும் அவசியமாகும். புகை பிடிக்கவே கூடாது. புகை பிடிப்பவரின் பக்கத்தில் நிற்கவும் கூடாது. பான்பராக், பாக்கு, புகையிலை சேர்த்து வெற்றிலை மெல்பவர்கள் அதனை தவிர்க்க வேண்டும். வெற்றிலை மெல்வதை முற்றாக நிறுத்த முடியாவிடில் வெற்றிலையைக் (கொடுப்புக்குள்) வாய்க்குள் வைத்துக் கொண்டு நித்திரை செய்வதைத் தவிர்க்க வேண்டும். வெற்றிலையில் சுண்ணாம்பு பூசி மெல்வதுடன் நிறுத்திக் கொள்ள வேண்டும். புகையிலையைச் சேர்க்கவே கூடாது. புகையிலையில் நிக்கொட்டின் எனப்படும் புற்றுநோய்க்கு ஏதுவான பொருள் காணப்படுகிறது. சாதாரணமாக இரத்தத்தை அடையும் வேண்டாப் பொருட்களை உடல் ஏதோ ஒரு வகையில் வெளியகற்றிவிடும். ஆனால், இந்த நிக்கொட்டினை உடலினால் வெளியேற்ற முடிவதில்லை. இது ஆயுள் கால நிலையான வைப்பாக (FIXED DEPOSIT) இருந்து புற்றுநோயைத் தோற்றுவிக்கிறது. ஒரு இடத்தில் ஏற்படும் புற்றுநோய் ஆனது இரத்தம், நிணநீர் போன்றவற்றின் வழியாக உடலின் பல பாகங்களிற்கும் சென்று, அங்கெல்லாம் புற்றுநோய் வியாபிக்கின்றது. இதனை ஆரம்ப நிலையில் கட்டுப்படுத்த அல்லது புற்றுநோய் தோன்றும் நிலை உள்ளதா என அறியப் பின்வரும் பரிசோதனைகள் உதவும்.

தொடரும்....




நமது ஈழநாடு வழங்கும்




உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

MEGA பரிசுப் போட்டி

முதற்பரிசு - 25,000

வழங்குவோர்: இரத்தினம் ஊர்தி சேவைத்தளம்

[இரத்தின கோபால்ஸின் இணைந்த நிறுவனம்]

32, சிறாம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்

அனைத்து வகையான மோட்டார் சைக்கிள்களும் நவீன இயந்திரங்களால் சேவிஸ் செய்து கொடுக்கப்படும்.

அசோசியேட்டட் மோட்டார் வெய்ஸ்ஸின் (AMW) அங்கீகரிக்கப்பட்ட யமஃகா, மோட்டார் சைக்கிள்கள், வெளி இணைப்பு இயந்திரங்களின் யாழ்ப்பாண விற்பனை முகவர்.

இரண்டாம் பரிசு - 15,000

வழங்குவோர்:

1. ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்

YONEX MULTI PALACE

விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்.

76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்



2. சமுத்திரா ரேட்ஸ் (லிமிட்டட்)

டீசல் என்ஜின், நெல் குற்றும், மா அரைக்கும் இயந்திரங்கள், உதிரிப்பாக விற்பனையாளர்கள்.

3/2 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

மூன்றாம் பரிசு - 10,000

வழங்குவோர்: சந்தியா மல்ரிகோட்யாட்

531, பருத்தித்துறை வீதி, நல்லூர். பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

Fancy goods, gift items, fevicryl & acron paint items.

இரண்டாவது ஆறுதல் பரிசு

வழங்குவோர்: மெக்ஸ்

70,பெரியகடை, யாழ்ப்பாணம்



இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்!
வினாக்கொத்துக்கு விடை தந்து பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்!!

உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது? (....................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது? (....................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன? (....................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயகனாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்? (....................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது? (....................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை ஒரே வகையில் பூர்த்தி செய்து, எதிர்வரும் மார்ச் 06 ஆம் திகதிக்கு முன்பாக -

'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.

பெயர்: ............................
வயது: ............................
முகவரி: ............................




சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## தோற்றும் மாணவர்களுக்கான முன் ஆயத்தப் பயிற்சிகள்






# மாணவர் மலர்

வினாப் பத்திரம் II

## கணிதம்

★ ஒரு வியாபாரி 5 நாட்களில் விற்ற பாலின் அளவு தொடர்பான வரைபு கீழே தரப்பட்டுள்ளது. இந்த வரைபின் உதவியுடன் வினாக்களுக்கு விடை தருக.




1. திங்கட்கிழமை விற்ற பாலின் அளவு யாது?
(.....................லீற்றர்)

2. ஞாயிறு, திங்கள் ஆகிய இரு நாட்களிலும் விற்ற பாலின் அளவு எவ்வளவு?
(.....................லீற்றர்)

3. புதன்கிழமையைவிட ஞாயிற்றுக்கிழமை எவ்வளவு பால் கூடுதலாக விற்கப்பட்டுள்ளது?
(.....................லீற்றர்)

4. ஒரு லீற்றர் பால் ரூபா 32 எனில், செவ்வாய்க்கிழமை விற்ற பாலினால் பெறப்பட்ட வருமானம் யாது?
(ரூபா.....................)

5. பால் நிரப்பப்பட்டுள்ள பாத்திரங்கள் 2 லிற்றர் கொள்ளக்கூடியவை எனில், வியாழக்கிழமை விற்ற பால் பாத்திரங்களின் தொகை எவ்வளவு?
(.....................)

6. ஞாயிற்றுக்கிழமை விற்கப்பட்ட பாலின் அளவு வேறு இரண்டு நாட்களில் விற்கப்பட்ட பாலின் அளவைவிட மிகவும் அதிகம் ஆகும். அந்த இரு நாட்களின் பெயரையும் எழுதுக?
(.....................)

★ கரும்பூர் ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு இலவசப்பயிற்சிப் புத்தகங்கள் விநியோகிக்கப் படுவதற்கான விழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விழாக்கருமங்களை ஒழுங்கு படுத்துவதற்கு அமைக்கப்பட்ட தகவல் அட்டவணை ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

| தரம் | வகுப்புக்கள் எண்ணிக்கை | மொத்த மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 4 | 148 |
| 2 | 4 | 146 |
| 3 | 4 | 147 |
| 4 | 4 | 140 |
| 5 | 4 | 138 |

1. பாடசாலையின் முதலாம் தரத்திலும் இரண்டாம் தரத்திலும் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு? (.....................)

2. முதலாம் தரத்திலுள்ள எல்லா வகுப்புகளிலும் மாணவர்களின் எண்ணிக்கைகள் சமமாக இருப்பின் ஒரு வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?
(.....................)

3. எல்லா வகுப்புகளிலும் இருக்கும் மாணவர்களின் எண்ணிக்கைகள் சமமாக இருக்கக்கூடிய வேறொரு தரத்தின் பெயர் குறிப்பிடுக?
(.....................)


4. விழாவில் மாணவர் ஒருவருக்கு ஆறு புத்தகங்கள் வீதம் கொடுப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தால், மூன்றாம் தர மாணவர்களுக்கு விநியோகிப்பதற்குத் தேவையான புத்தகங்களின் எண்ணிக்கை எவ்வளவு?
(.....................)

5. நாலாம்தர மாணவர்களுக்கு ஒரு மாணவருக்கு ஆறு புத்தகங்கள் வீதம் விநியோகிப் பதற்கு 10 புத்தகங்கள் அடங்கிய பக்கற்றுக்கள் எவ்வளவு தேவையாகும்?
(.....................)

★ விழாவுக்கு வந்திருந்த 5 ஆம் தர மாணவர்களின் எண்ணிக்கை பற்றிய விபரங்கள் பின்வருமாறு.

| வகுப்பு | 5A | 5B | 5C | 5D |
|---|---|---|---|---|
| மாணவர் எண்ணிக்கை | 32 | 34 | 36 | 30 |

வந்திருந்த மாணவர்களின் எண்ணிக்கையைக் காட்டும் நிரல் வரைபை வரைக.





7. 5 ஆம்தர மாணவர்களில் விழாவிற்கு வராதவர்கள் எத்தனை பேர்?
(.....................)

8. விழா மு.ப 9.45 இற்கு ஆரம்பித்து மு.ப 11.15 இற்கு முடிவடைந்தது எனில், விழா எவ்வளவு நேரம் நடைபெற்றது?
(........மணி............நிமிடம்)

### சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள். (ஆரம்பவிஞ்ஞானம்)

★ விளையாட்டு மின் வீதி சமிக்ஞை மாதிரி ஒன்றின் வரைபடம் கீழே தரப்பட்டுள்ளது.




| | | |
|---|---|---|
| B | - | வர்ண மின்குமிழ் |
| S | - | இணைக்கும் கொழுக்கி |
| W | - | கம்பி |
| X, Y, Z | - | மூன்று ஆணிகள் |

1. S இனால் x, y, z ஆணிகளைத் தனித்தனியாக தொடும்போது எவ்வர்ண மின்குமிழ் ஒளிரத்தக்கது?

2. ஏனைய மின்குமிழ் இரண்டும் தனித்தனியாக ஒளிர்வதற்கு மாதிரியில் செய்ய வேண்டிய மாற்றத்தை வரைபடத்தில் வரைந்து காட்டுக?

3. உலர் மின்கலத்தில் +, - குறியீடுகள் எவ்விடங்களில் இடப்பட்டிருக்கும் என உலர் மின்கலத்தில் குறித்துக் காட்டுக?

(தொடரும்....)

வி.என்.எஸ்.உதயசந்திரன்
B.A. (Cey) B.Ed(Hons) Dip.in.Ed.

## அன்பார்ந்த பெற்றோர்களே!

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பாகத் தற்போது நாம் வெளியிட்டுவரும் மாதிரி வினாத்தாள் வழிகாட்டல் குறிப்பு தொடர்பாக உங்களிட மிருந்து அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் எதிர்பார்க்கின்றோம்.



உங்கள் ஆலோசனைகளை, அபிப்பிராயங்களை
மாணவர் மலர்,
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்

- பொறுப்பாசிரியர்.

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சை

## மாதிரி வினாத்தாள்

# இணைந்த கணிதம் I

3 மணித்தியாலங்கள்

01)

a) $x^3 + 3px^2 + 3qx + r = (x - \alpha)^2 (x - \beta)$ இங்கு $\alpha \neq \beta, \alpha \neq 0, p^2 \neq q$ எனின் ஒத்த குணகங்களைச் சமப்படுத்துவதன் மூலம் என்பது $x^2 + 2px + q = 0$ இன் ஒரு மூலம் எனக் காட்டுக. அத்துடன் $\alpha$ என்பது $px^2 + 2qx + r = 0$ இனதும் ஒரு மூலம் எனவும் $\alpha = \frac{r - pq}{2(P^2-q)}$ எனவும் உய்த்தறிக.

b) $\text{மட}_{16}xy = 1/2\ \text{மட}_4 x + 1/2\ \text{மட}_4 y$ எனக் காட்டுக.
இதிலிருந்து $\text{மட}_{16}xy = 7/2$
$(\text{மட}_4 x)\ (\text{மட}_4 y) = -8$ எனும் சமன்பாடுகளை தீர்க்க.

c) a யும் b யும் மெய்யான ஒருமைகளாயிருக்க,
$y = \frac{ax + b}{(x-1)(x-a)}$ எனும் சார்பு x=2 இல் நிலையான பெறுமானம் -1 ஆகும்.
a யையும் b யையும் காண்க.

02)

a) $(2x^2+3/x)^{19}$ எனும் விரிவில் $x^{38-3r}$ இன் குணகமும் $x^{35-3r}$ இனது குணகமும் சமனாக இருப்பின் r இனது பெறுமானத்தைக் காண்க.

b) ஒரு வகுப்பில் 6 ஆண் பிள்ளைகளும் 4 பெண் பிள்ளைகளும் உள்ளனர். இவ்வகுப்பில் இருந்து 5 பேர் கொண்ட குழுவை தெரிவு செய்ய வேண்டியுள்ளது. தெரிவு செய்ய வேண்டிய வெவ்வேறு குழுக்களின் எண்ணிக்கையைப் பின்வரும் சந்தர்ப்பங்களில் காண்க.
i எவ்வித கட்டுப்பாடும் இல்லாதபோது.
ii எல்லோருமே ஆண்களாக இருக்குமாறு.
iii மூன்று ஆண்களும் 2 பெண்களும் இருக்கக்கூடியவாறு.
iv ஆண்களை விட பெண்கள் கூட உள்ளவாறு.
v குறிக்கப்பட்ட ஆணும் குறிக்கப்பட்ட பெண்ணும் ஒருங்கே இராதவாறு தெரிவு செய்யப்படத்தக்க வழிகளின் எண்ணிக்கையைக் காண்க.

03)

a) $n \geq 1$ என்பதற்கு $\cot\theta_{n+1} = \cot\theta_n . \operatorname{cosec}\theta_1 + \cot\theta_1 \operatorname{cosec}\theta_n$ என்று அமைய $\theta_1, \theta_2$ -------$\theta_n$ என்பது கூர்கோணங்களின் தொடரியாகும்.
$\operatorname{cosec}\theta_{n+1} = \operatorname{cosec}\theta_n \operatorname{cosec}\theta_1 + \cot\theta_n \cot\theta_1$ எனக் காட்டுக.
n நேர் முழு எண்ணாக இருக்கையில்
$(\cot\theta_1 + \operatorname{cosec}\theta_1)^n = \cot\theta_n + \operatorname{cose}\theta_n$ எனக் கணிதத் தொகுத்தறி முறையில் நிறுவுக.

b) $\sum_{r=1}^{n} r(r+1) = 1/3n\ (n+1)(n+2)$ எனக் காட்டுக.
$\sum_{r=1}^{n} \frac{1}{(2r-1)(2r+1)}$ ஐக் காண்க.
இதிலிருந்து
$\sum_{r=1}^{2n} \{r(r+2)\}^{(-1)}$ இன் பெறுமானத்தை உய்த்தறிக.

04)

a) ஆகன் வரிப்படத்திலே புள்ளிகள் A,B,C என்பன முறையே $Z_1, Z_2, Z_3$ ஆகிய சிக்கல் எண்களுக்கு நேரொத்தவை. A, B யிலிருந்து இடஞ்சுழிப் போக்கில் அளக்கப்பட்ட A, C யின் சாய்வுக் கோணம் $\theta$ ஆகவும் AB = AC ஆகவும் இருப்பின்,
$Z_3 - Z = (Z_2 - Z_1)(\cos\theta + i\sin\theta)$ எனக் காட்டுக.

ஆகன் வரிப்படத்தில் PQRS ஒரு சதுரம்.
P, Q என்பன முறையே $Z_1, Z_2$ ஆகிய எண்களுக்கு நேரொத்தன எனில் - R, S இற்கு நேரொத்த சிக்கல் எண்களை $Z_1, Z_2$ என்பவற்றில் காண்க

Q, S என்பன முறையே $Z_1, Z_2$ ஆகிய சிக்கல் எண்களுக்கு நேரொத்தன எனில்- P, R இற்கு நேரொத்த சிக்கல் எண்களை $Z_1, Z_2$ என்பவற்றின் சார்பில் தருக

P ஆனது 1-i இற்கு நேரொத்ததாகவும் Q ஆனது Z இற்கு நேரொத்ததாகவும் இருக்க PR=22ஆகுமாறு R மாறினால் Z இற்கானவொரு தொடர்பை பெறுக. இதிலிருந்து Q இன் ஒழுக்கைக் காண்க.

05) $Z_1 \equiv a_1x + b_1y + c_1 \equiv 0, Z_2 \equiv a_2x + b_2y + c_2 = 0$ என்பன தரப்பட்டுள்ளன. இரு சமாந்தரமல்லாத நேர்கோடுகள் $\lambda$ இன் ஒவ்வொரு பெறுமானத்துக்கும் நேர்கோடு $Z_1 + \lambda Z_2 = 0$ ஆனது ஒரு நிலைத்த புள்ளியினூடாக செல்கின்றதெனக் காட்டுக

ஒரு முக்கோணி x y z இன் எதிர்ப்பக்கங்கள் Y, Z ஆகியவற்றினூடாக வரையப்பட்டள்ள செங்குத்துக்களின் சமன்பாடுகள் முறையே x-5y+6=0, 3x-y-1=0 ஆகும். X இன் ஆள்கூறுகள் $(P_1-P)$ என எடுக்கப்படுமெனின் xy, xz ஆகிய கோடுகளின் சமன்பாடுகளையும் Y, Z ஆகியவற்றின் ஆள்கூறுகளையும் p யின் சார்பில் காண்க.

p மாறும்போது முக்கோணி x y z இன் மையப்போலியானது, கோடு x+6y-3=0 மீது கிடக்கிறதென நிறுவுக.

06) $R1 \equiv (x_1, y_1), R2 \equiv (x_2, y_2)$ ஆகிய புள்ளிகளை விட்டம் ஒன்றின் முனைப் புள்ளிகளாகக் கொண்ட வட்டத்தின் சமன்பாடு.

$(x-x_1)(x-x_2) = (y-y_1)(y-y_2) = 0$ எனக் காட்டுக.

உற்பத்தி O விற்கு ஊடாக $S = x^2 + y^2 - 2ax + a^2 - r^2 = 0$ எனும் வட்டத்திற்கு மாறும் நாண் ஒன்று வரையப்பட்டுள்ளது. இங்கு a யும் r உம் நேரானவை.

1. $r \geq a$ 2. $r < a$ ஆகிய வகைகளை வேறுபடுத்திக் காட்டி மேலே குறிப்பிட்ட நாணின் நடுப்புள்ளியின் ஒழுக்கைக் காண்க.

$r = a/\sqrt{2}$ ஆகும் போது மேற்போந்த ஒழுக்கைப் பற்றி யாது கூற முடியும்?

07)

a) எல்லை $\lim_{x \to 0} \frac{\sqrt{4 + x^2} - 2}{x^2}$ ஐக் காண்க

b) பொருத்தமான சார்புகளை வகையிடுவதன் மூலம் $0 < x < \pi/2$ இற்கு
$x - x^3/6 < \sin x < x - x^3/6 + x^5/120$ என நிறுவுக.
இதிலிருந்து எல்லை $\lim_{x \to 0} \frac{x - \sin x}{x^3} = \frac{1}{6}$
எனக் காட்டுக.
எல்லை $\lim_{n \to 0} \frac{x}{x^3} - \frac{\sin x}{6} = 1$ என்பதை உய்த்தறிக.

c) முதற் கோட்பாட்டைப் பயன்படுத்தி
$\frac{d}{dx}\{\operatorname{Sin}(3x)\} = 3\cos(3x)$ என நிறுவுக.

d) $x > 0$ இற்கு $y = \sqrt{x + \sqrt{x + \sqrt{x}}}$ எனில்,

$2y \frac{dy}{dx} = 1 + \frac{1}{2\sqrt{x + \sqrt{x}}} + \frac{1}{\sqrt{x(x + \sqrt{x}}}$ எனக் காட்டுக.

08)

a) $\frac{1}{(x^2-1)(x^2-3x+2)}$ ஐப் பகுதிப் பின்னங்களாக எடுத்துரைக்க.

இதிலிருந்து $\int \frac{dx}{(x^2-1)(x^2-3x+2)}$ ஐக் காண்க.

b) $\int_0^a f(x)dx = \int_0^a f(a-x)\, dx$ எனக் காட்டி, இதிலிருந்து

$\int_0^{\frac{\pi}{2}} \frac{x\,dx}{\sin x + \cos x} = \frac{\pi}{4} \int_0^{\frac{\pi}{2}} \frac{dx}{\sin x + \cos x}$ எனக் காட்டுக.

$\int_0^{\frac{\pi}{2}} \frac{x\,dx}{\sin x + \cos x} = \frac{\pi}{2\sqrt{2}} \ln(\sqrt{2}+1)$ என்பதை உய்த்தறிக.

09)

a) பின்வருவனவற்றின் பொதுத்தீர்வுகளைக் காண்க
1. $\cot^2\theta + (\sqrt{3} + 1/\sqrt{3})\cot\theta + 1 = 0$
2. $\operatorname{cosec}\theta = \cot\theta + \sqrt{3}$
3. $4\cos\theta . \cos 2\theta . \cos 3\theta - 1 = 0$

b) $\sin\alpha + \sin p = x$
$\cos\alpha + \cos p = y$ எனின்,
$\cos(\alpha+p), \cos(\alpha-P)$ என்பவற்றை a, b இல் காண்க.

மேலும், $\tan\theta + \tan\phi = \frac{8ab}{(a^2+b^2)^2 - 4a^2}$ எனவும் காட்டுக.

எஸ்.மணிவண்ணன்

## க.பொ.த.உயர்தர பொதுச்சாதாரணப் பரீட்சையை (C.G.T)

## இலகுவாக எதிர் கொள்வது எவ்வாறு?

### பிரச்சினையைத் தீர்த்தல்

இது பின்வரும் மூவகை ஆற்றல்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

1. பிரச்சினையைத் தீர்க்கத் தேவைப்படும் யாதாயினும் ஒரு தகவலை அல்லது தகவல்களை இனம்காணல்-
பிரச்சினையைத் தீர்க்க சேகரிக்கும் தகவல்களில் சில பயன்படலாம். மற்றைய சில பொருத்தமற்றவையாக அல்லது அவசியமற்றவையாக இருக்கலாம்.

உ+ம் இல. I. கூற்று மாத்திரம் பிரச்சினைக்கு விடையளிக்கப் போதியதெனின் எழுத்து A யையும்,
இல. II. கூற்று மாத்திரம் பிரச்சினைக்கு விடையளிக்கப் போதியதெனின் எழுத்து B யையும்,
பிரச்சினைக்கு விடையளிப்பதற்கு இருகூற்றுக்களும் அவசியமெனின் எழுத்து C யையும்,
பிரச்சினைக்கு விடையளிப்பதற்கு இருகூற்றுக்களில் யாதாயினும் ஒன்று போதியதெனில் எழுத்து D யையும்,
இருகூற்றுக்களும் பிரச்சினைக்கு விடையளிப்பதற்குப் போதியவையல்ல எனின் எழுத்து E யையும் தெரிவு செய்க.

பிரச்சினை : கடந்த தவணைப்பரீட்சையில் நீர் பெற்ற சராசரிப்புள்ளி யாது?
கூற்று I : அது தயாபரன் பெற்ற புள்ளியாகும்.
கூற்று II : தயாபரன் பெற்ற புள்ளி மேற்சித்தி மட்டத்தைக் காட்டுகின்றது.

1. A 2. B 3. C
4. D 5. E

(தொடரும்)

ஆக்கியோர்:- P.கமல்தாஸன் B.A, Spl.Trd com, Dip in Ngt (OUSL)
P.உமாசங்கர் B.Com, Spl.Trd com C.B.F (LON)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

*இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி*
*மாசுஅறு காட்சி அர்க்கு.*
*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## கண்துடைப்பு!

இலங்கையில் வேலைவாய்ப்பற்று வாடும் இளைஞர், யுவதிகளில் - பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்களின் எண்ணிக்கை வருடாந்தம் மிகக் குறிப்பிட்ட வீதத்தில் அதிகரித்து வருவதாக அரசாங்கப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இறுதியாகத் திரட்டப்பட்ட தகவல்களின்படி - 25,000 இற்கும் அதிகமான பட்டதாரிகள் வேலையற்று இருப்பதாகத் தொழில் அமைச்சு அறிவித்திருக்கிறது.

இவர்களுக்கு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான பயிற்சிகளும், குறிப்பிட்ட காலத்திற்கு ஊக்குவிப்புப் பணமும் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகவும் தெரியவருகின்றது.

அரசின் திட்டம் இப்படியிருக்ககையில் - இத்தகைய பயிற்சிகளும், நடவடிக்கைகளும் - வேலையற்றிருக்கும் இப்பட்டதாரிகளுக்கு எத்தகைய உறுதியான வாய்ப்புக்களை எதிர்காலத்தில் தரப்போகின்றன என்ற கேள்வியும் எழுவது தவிர்க்க முடியாததாகின்றது.

ஏனெனில் - இலங்கையைப் பொறுத்தவரையில் - உள்நாட்டு வேலைவாய்ப்பை எடுத்துக்கொண்டால், இங்கு பெருமளவு அபிவிருத்தித் திட்டங்களோ, அரச சேவைக்குத் தேவையான உள்ளீர்ப்புக்களோ தற்போதைக்கு முன்னெடுக்கப்படும் சாத்தியக்கூறுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

கடந்த இரண்டு தசாப்தங்களாகத் தொடர்ந்த போரினால் பெரும் சிதைவைச் சந்தித்திருக்கும் பொருளாதாரத்தை அங்குலம் அங்குலமாகக் கட்டியெழுப்புவதற்கே - மீண்டும் ஒரு பொருளாதாரக் கட்டமைப்பை தூக்கி நிறுத்துவதற்கே - சமாதானத்தின் வழியான வெளிநாட்டு உதவிகளையே நம்பியிருக்கும் அரசொன்றினால் - வேலைவாய்ப்புக்களை அள்ளிவழங்கும் வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கமுடியுமென எதிர்பார்த்தால் அது பகற்கனவாகவே இருக்கும்.

அதேவேளை - அரசாங்க சேவைகளிலும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கோ, பிரதியீடுகளை மேற்கொள்வதற்கோ - முடியாத நிலையிலும் அரசாங்கம் இருப்பதைச் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

அரசாங்கத் திணைக்களங்களிலும், கூட்டுத்தாபனங்களிலும் ஆட்சேர்ப்பை மேற்கொள்வதற்கு - அரசாங்கத்தின் பொருளாதார பலம் இடங்கொடுக்காத நிலையில்- 'சுயமாகவே ஓய்வுபெறும் திட்டம்' ஒன்றையும் உலக வங்கியின் உதவியுடன் அரசாங்கம் நடைமுறைப்படுத்திப் பார்த்தது.

அரசாங்க சேவைகளிலுள்ள - 'வயோதிபர்களை', அவர்களாகவே விலகிச் செல்லும் கவர்ச்சியைக் காட்டி, இளைஞர்களை உள்ளீர்ப்புச் செய்வதற்கு அரசாங்கம் எடுத்த முயற்சி இற்றைவரை வெற்றியைத் தரவில்லை.

இதில் நடந்த சுவாரசியமான திருப்பமென்னவென்றால் - உயர் பதவிகளில் இருந்த 'பெருச்சாளிகள்' சிலர் - இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தி அரசாங்கத்திடமிருந்து பெருந் தொகை நிதியைப் பெற்று விலகிக் கொண்டாலும் - மீண்டும் ஒப்பந்த அடிப்படையில், அரசாங்க சேவைகளுக்குள் உள்நுழைந்து கொண்டதைச் சொல்லலாம்.

பிரபல சிங்களப் பழமொழியான 'கதிரையிலிருந்து கனத்தைக்குப் போகும்' - புண்ணியவான்களாக இவர்கள், என்றுமே அரசாங்கச் சேவையை உடும்புப்பிடி எனப் பிடித்து வருவதால் - இளைஞர்களை உள்ளீர்ப்புச் செய்யமுடியாத சூழல் நிலவுவதுடன்,

நடுத்தர, கீழ் பதவி நிலைகளுக்குள் நுழையும் இளைஞர்களால் - உயர் பதவி அனுபவங்களைத் திரட்டிக்கொள்ள முடியாத நிலையும் நிலவுகின்றது.

இது ஒருபுறமிருக்க - உண்மையிலேயே வேலைவாய்ப்பற்றிருக்கும் பட்டதாரிகள் மீதுள்ள கவலையில்தான் புதிய திட்டங்களை அரசாங்கம் த்யாரிக்கிறதா என்றால், அதற்குக் கிடைக்கும் பதிலும் சந்தேகத்தைத் தருவதாகவே அமைகின்றது.

ஜே.வி.பி. தனது அரசியல் இலக்குக்காக - வேலைவாய்ப்பற்றிருக்கும் இளைஞர், யுவதிகளை - பட்டதாரிகளைக் குறிவைத்து இறங்கியிருப்பதாலும் - அது தெற்கில் சாதகமான பலன்களை ஜே.வி.பிக்கு அள்ளி வீச ஆரம்பித்திருப்பதாலும் -

ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தலே, அரசாங்கம் பட்டதாரிகளுக்கான புதிய பயிற்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவையை, அவசியத்தை உருவாக்கியது.

எனவே, வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகள் - வெறுமனே அரசாங்கத்தை நம்பியிருக்காமல், தமது பாதையைத் தாமே தேடி, எதிர்காலத்தை வளப்படுத்த தமது கைகளை நம்புவதே பொருத்தமானதாகவும், உபயோகமாகவும். இருக்கும் என்பதைச் சொல்லவே வேண்டியிருக்கிறது.

# கல்லம்பற்றைக் கரையோரத்தில் கடற்படையின் நடமாட்டம் தீவிரம்

திருகோணமலை - குச்சவெளிக் கல்லம்பற்றையில் கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற சம்பவத்தையடுத்து, கரையோரப்பகுதியில் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன.

கல்லம்பற்றையில் புலிகளைக் கடற்படையினர் சுற்றிவளைத்ததால் ஏற்பட்ட பதற்றம் கண்காணிப்புக்குழுவின் தலையீட்டை அடுத்து முடிவுக்கு வந்திருந்தமை தெரிந்ததே.

இதேவேளை, குச்சவெளிக் கடற்பரப்பிலும் கடற்படைப் படகுகளின் கண்காணிப்பும் தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது. இப்பகுதிக்கு மேலதிகக் கடற்படைப் படகுகள் அனுப்பப்பட்டு இருப்பதாவும் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

கல்லம்பற்றையில் மோதல் ஏற்படும் சூழல் உருவானதற்கு - புலிகள் மற்றும் இராணுவத்தினரின் கட்டுபாட்டுப் பிரதேச எல்லைகள் தெளிவாக வரையறுக்கப்படாமையே காரணம் என்று இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உபதலைவர் ஹோக்லன்ட் தெரிவித்தார்.

## பாதுகாப்பு வலயத்துக்குள் பிரவேசித்ததாக 15 வயதுச் சிறுவன் படையினரால் கைது

(நமது நிருபர்)

வவுனியா - இரணை இலுப்பைக்குளத்தில் இராணுவத்தினரின் உயர்பாதுகாப்பு வலயத்தினுள் அத்து மீறி நுழைந்ததாகக் கூறி இராணுவத்தினரால் கைதான பதினைந்து வயதுச் சிறுவன் நேற்றுமுன்தினம் வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

மேற்படி சிறுவனைப் பொலிஸாரிடம் இராணுவத்தினர் ஒப்படைத்திருந்தனர். பொலிஸார் இச்சிறுவனை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது, இன்றுவரை அவரை நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். இக் காலபபகுதிக்குள் சிறுவனைப் பொறுப்பேற்குமாறு பெற்றோ ருக்கு நீதிவான் சிறிநிதி நந்தசேகரம் உத்தரவிட்டார்.

### மாதத்தின் முதல் வெள்ளிதோறும்

## சங்கானைப் பிரதேச செயலகத்தில் வேலைவாய்ப்புப் பிரிவு செயற்படும்

(அராலி)

சங்கானைப் பிரதேசசெயலகத்தில் தொழிற்திணைக் களத்தின் வேலைவாய்ப்புப் பிரிவில் - கடந்த வெள்ளிக் கிழமை வேலையற்றவர்களுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதில் மேற்படி பிரதேசசெயலர் பிரிவில் வசிக்கும் வேலைவாய்ப்பற்ற இளைஞர், யுவதிகள் பலர் பதிவுகளை மேற்கொண்டனர்.

இந்த வேலைவாய்ப்புப் பிரிவு ஒவ்வொரு மாதமும் முதல்வார வெள்ளிக்கிழமையில் இப்பிரதேச செயலகத்தில் செயற்படும் என உதவிப்பிரதேச செயலர் மு.சிவராசா தெரிவித்துள்ளார். (118)

# பேச்சு நடந்துகொண்டிருந்தாலும் படையினர் உஷார் நிலையிலேயே!

### பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன கூறுகிறார்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்கள் நடந்து கொண்டிருந்தாலும், படையினரை உயர்ந்தபட்ச விழிப்பு நிலையிலேயே இருக்க உத்தரவிட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

லங்காதீப பத்திரிகைக்கு அவர் வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது -

நாம் யுத்தத்துக்குத் திரும்பினாலும் சரி திரும்பா விட்டாலும் சரி படையினர் உஷார் நிலையிலேயே இருக்க வேண்டும். அதற்கேற்ப எதற்கும் தயாராகவே படையினர் இருக்கின்றனர்.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமாதான முயற்சிகள் வெற்றிபெறும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. சர்வதேச சமூகத்துக்குப் புலிகள் வாக்குறுதி வழங்கியிருக்கிறார்கள் என்று கூறிய மாரப்பன,

நெடுந்தீவுக் கடலில் கடற்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்ட புலிகளின் படகு - ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டதான குற்றச்சாட்டுக்களையும் நிராகரித்தார்.

நெடுந்தீவில் கைப்பற்றப்பட்ட படகு ஆயுதக் கடத்தலில் ஈடுபடவில்லை. அந்தப் படகில் ஒரேயொரு ஆயுதம் மட்டுமே இருந்தது. அந்தப்படகு ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டதென்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை என அவர் மேலும் கூறினார்.

விடுதலைப்புலிகள் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீது நம்பிக்கை வைத்துள்ளார். அதனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்ற நம்பிக்கையுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## க.பொ.த உயர்தரப் பரீட்சை ஏப்ரல் மூன்றாம் வாரத்தில்

இந்த ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் ஏப்ரல் 3 ஆம் வாரம் ஆரம்பமாக இருக்கின்றன.

மே 20 ஆம் திகதிக்கு முன்னர் சகல பாடப் பரீட்சைகளையும் பூர்த்தி செய்யத் திட்டமிட்டுள்ளதாகப் பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்கு முன் வெளியிடவுள்ளதாகப் பரீட்சை ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

# உயர்தரப்புள்ளி அடிப்படையிலான ஆசிரியர் நியமனத்துக்கு நடவடிக்கை

### கல்விச்சேவை ஆணைக்குழு ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் க.பொ.த உயர்தரப் புள்ளி அடிப்படையில் ஆசிரிய நியமனங்கள் விரைவில் வழங்கப்படவுள்ளன. இந்த நியமனங்கள் வழங்குவது தொடர்பாகக் கல்விச்சேவை ஆணைக்குழு ஆராய்ந்து வருகின்றது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவிவரும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

க.பொ.த உயர்தரப்புள்ளி அடிப்படையில் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பான விண்ணப்பங்கள் விரைவில் கோரப்படவிருக்கின்றது.

ஆசிரியர் நியமனங்கள் தொடர்பாகக் கல்விச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைத் தகுதியானவர்களிடம் இருந்து கோருவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ச)

### கொடிகாமம் பனை, தென்னை கூ. சங்கத்தில்

## இடப்பெயர்வின் பின்னர் 10 ஊழியர்கள் தொழிலிழப்பு

(சரசாலை)

கொடிகாமம் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றிய 10 இற்கும் அதிகமான ஊழியர்களுக்கு இடப்பெயர்வுக்குப் பின்னர் இன்னமும் வேலைவாய்ப்பு வழங்கப்படவில்லை எனத் தெரியவருகின்றது.

இடப்பெயர்வின்போது சங்க ஊழியர்கள் பலர் இடை நிறுத்தப்பட்டிருந்தனர். எனினும் மீண்டும் கொடிகாமத்தில் சங்க அலுவலகம் இயங்கத்தொடங்கி ஆறுமாதங்கள் ஆகியும் ஒரு சிலருக்கே வேலை மீளவும் வழங்கப்பட்டி ருக்கிறது. 10 இற்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு இதுவரை வேலை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (34)

## நெல், மிளகாய் உற்பத்தி குறித்து அரச செயலகக் கூட்டத்தில் ஆய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ. மாவட்ட விவசாய உபகுழுக் கூட்டம் நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு யாழ். அரச அதிபர் பணிமனையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் நெல், மிளகாய் உற்பத்திகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி பற்றி ஆராயப்பட்டதுடன், மிருக வளர்பபை மேம்படுத்த நல்லின மாடுகளை இங்கு கொண்டுவந்து இனவிருத்தி செய்தல் மற்றும் யாழ். குடாநாட்டில் பிடிக்கப்படும் மீன்களைப் பழுதடையாது பாதுகாக்கக் குளிரூட்டி சாதனங்களைக் கொள்வனவு செய்தல் போன்ற விடயங்கள் பற்றி முக்கியமாக ஆராயப்பட்டது.

இவ்வுபகுழுக் கூட்டத்தில் பிரதித்திட்டமிடல் பணிப்பாளர், அரச அதிபர், திணைக்கள அதிகாரிகள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ரா)

# இனத்தின் அடையாளங்களான மொழியும், கலாசாரமும் பேணப்பட வேண்டியதன் அவசியம் உணரப்பட வேண்டும்

**கலாநிதி க.குணராசா பிரபல எழுத்தாளரும், ஓய்வுபெற்ற உதவி அரச அதிபரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னைநாள் பதிவாளரும், பிராந்திய ஆணையாளருமாவார்.**

**இவர் நல்லூர் வரலாற்றுக் கழகத்தின் தலைவராகவும் இருந்து வருகிறார். நல்லூர் இராசதானியின் தொல்லியல் அடையாள எச்சங்கள் மற்றும் அதன் பாதுகாப்பு, முக்கியத்துவம் என்பன குறித்து எமக்கு அவர் வழங்கிய நேர்காணல் இது.**



கலாநிதி க.குணராசா

*கேள்வி:-* 'நல்லூர் வரலாற்றுக் கழகத்தின் தலைவர் என்ற வகையில் அது உருவாக்கப்பட்டதன் நோக்கம்' என்ன என்று கூறுங்கள்?

*பதில்:-* நோக்கம் மிகத்தெளிவானது. நல்லூர்ப் பிரதேசத்தில் நமது தமிழ் மூதாதையினரின் பெருமைகளை அடையாளப்படுத்தும் கட்டமைப்புக்கள் பலவுள்ளன. தொல்பொருட்கள் பலவுள்ளன. அவற்றைப் பேணி எமது வரலாற்றுத் தொன்மையை எல்லாச் சந்ததியினரும் அறிய வைக்கவேண்டும். யமுனா ஏரி, முத்திரை மண்டபம், பூதத்தம்பி வளைவு, மந்திரிமனை முதலானவை அத்தகைய தொல்பொருட் கட்டமைப்புக்களாம். இவை கவனிப்பாரற்றுச் சிதிலமடைந்து கொண்டு போவதிலிருந்து தடுத்துப் பாதுகாக்கும் நோக்குடன், நல்லூர் பிரதேசச் செயலாளர் ஒரு கூட்டத்தைக் கூடி, நல்லூர் வரலாற்றுக் கழகத்தைத் தொடக்கி வைத்தார். அதன் காப்பாளர்களாகப் பேராசிரியர் சிற்றம்பலம், பேராசிரியர் சத்தியசீலன், பேராசிரியர் கிருஸ்ணராஜா, கலாநிதி புஷ்பரட்ணம் முதலானோர் உள்ளனர். நான் தலைவர். ஒரு செயற்குழுவுமுள்ளது.

*கேள்வி:-* நீங்கள் குறிப்பிட்ட தொல்பொருட் கட்டமைப்புக்களைப் பற்றிச் சிறிது விளக்கமாகக் கூறுங்கள்?

பதில்:- சங்கிலித்தோப்பில் பகர வடிவ யமுனா ஏரி அமைந்துள்ளது. 1478 இல் யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனாக முடிசூடிக் கொண்ட சிங்கைப் பரராசசேகரன் அமைப்பித்த பகரவடி தடாகமே யமுனா ஏரியாகும். யமுனை நதியிலிருந்து தீர்த்தம் கொண்டுவரப்பட்டு இந்த ஏரியினுள் பெய்யப்பட்டதால், யமுனா ஏரி எனப்பட்டது.




அது சிதிலமடைந்து வருகின்றது. ஒரு பக்கக்கட்டு உடைந்து அண்மையில் விழுந்துமுள்ளது. 1519 இல் சங்கிலி செகராசசேகரன் மன்னனாகியபோது, அவனது முதன் மந்திரியாக விளங்கிய பரநிருபசிங்கன், தான் வாழ்வதற்காக அமைத்துக் கொண்ட கட்டடமே மந்திரிமனை ஆகும். இந்த மனையின் முன்பக்க வாயில் (போர்ச்) ஒல்லாந்தர்காலக் கட்டமைப்பாகும்.

வாயிலுக்குப் பின்னாலுள்ள மனை - நாலரை நூற்றாண்டுகளுக்குப் பிற்பட்டதாகும். பின்னர் இந்த முன்வாயிலில் இக்கட்டடத்தில் உரிமை கொண்டாடியவர்கள் தம் பெயர்களைப் பொறித்துக் கொண்டார்கள். இந்த மந்திரிமனையின் பின்பக்க மண்டபத்தில் ஒரு சுரங்க வாயிலிப்பதாகக் கூறப்படுவது தவறு. ஒன்றன் கீழ் ஒன்றாக அமைந்த மூன்று நிலவறைகளே உள்ளன.

1967 களில் நான் இவற்றுள் இறங்கிப் பார்த்துள்ளேன். இவை பொக்கிஷ அறைகளாகவும், பதுங்கு குழிகளாகவும் தெரிந்தன. சங்கிலித்தோப்பு முகப்பிலுள்ள கட்டமைப்பு ஒல்லாந்தர் காலத்திற்குரியது. இதனைச் சங்கிலியின் மாளிகை முகப்பு எனத் தவறாகக் கூறப்படுகின்றது. உண்மையில் ஒல்லாந்தர் காலத்தில் கோட்டை வாசல் முதலியாராக விளங்கிய பூதத்தம்பி மாளிகை வாயிலாகும்.

இந்த வாயிலிற்கு 300 யார் கிழக்காக முத்திரை மண்டபம் உள்ளது.

பிரித்தானியர் காலத்தில் வன்னிக்கு இங்கிருந்து சேலைகள் அனுப்பப்பட்டபோது - ஊடுவரி வசூலித்து, முத்திரை குத்தப்பட்ட கட்டடமாகும்.



நல்லூர் மந்திரிமனையில் பழைய தோற்றம். முன்பக்கம் முன்னர் இருந்த நிலை. ஒல்லாந்தர் காலத்தில் முன்வாயில் (போர்ச்) கட்டடப்பட்டு, பழமை மறைந்தது.

*கேள்வி:-* 'மந்திரிமனை' இன்று புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான நிதி எவ்வாறு பெறப்பட்டது?

*பதில்:-* எங்கள் கழகத்தின் கோரிக்கைக்கு இணங்க யாழ்ப்பாண நாடாளுமன்றப் பிரதிநிதி ஆனந்தசங்கரி நான்கு இலட்சம் ரூபாவைப் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கி, நல்லூர் பிரதேசச் செயலகத்திற்கு வழங்கினார். அவர்கள் புனருத்தாரண வேலையை, தொனமை மாறாது நிறைவேற்றியுள்ளனர்.

*கேள்வி:-* 'மந்திரிமனை' அமைந்துள்ள காணி குறித்தும், கட்டடம் குறித்தும் சிலர் உரிமை பாராட்டுகிறார்களா?

*பதில்:-* ஆம். நல்லூர் சட்டநாதர் கோயில் தர்மகர்த்தாசபை அது தங்களுக்குரியதென்கிறது. தாங்களே தொடர்ந்து பராமரித்து வந்ததாகக் கூறுகிறது. கோயிலின் குருக்கள் மனையாக விளங்கியது என்கின்றனர். சீனிவாசகம்பிள்ளை தம்பையாபிள்ளை குடும்பத்தினர் அது அவரின் சமாதிச் சொத்து என்கின்றனர்.

உண்மையில் அவரின் சமாதி, கோயில் வீதியில் உள்ளது. அன்னாரின் 'திரி ஓலக்கவாயில்' என மந்திரிமனையின் ஒல்லாந்த வாயிலில் கல்வெட்டுள்ளது. சிங்கப்பூரில் வாழும் நரசிங்கம் என்பவர், இந்த மனை தனது மூதாதை பரநிருபசிங்கன் வழிவந்ததெனக் கூறுகிறார். இப்போது யாருக்கு உரிமை என்பதைவிடுத்து, அழியுந்தறுவாயிலிருந்த மந்திரிமனையைத் திருத்திப் பாதுகாப்பது அவசியமாகியது. அதனால் அப்பணி நிறைவேற்றப்பட்டது. தொல்பொருளியல் சட்டத்தின்படி, வரலாற்று முக்கியத்துவமெனக் கருதப்படும் கட்டமைப்புக்களுக்கு உரிமை கோருவது தவறாகும்.

உரிமை பாராட்டுபவர்கள் இந்த மனையைப் பழமை மாறாது பேண முன்வருவாராகில் மக்கள் எவரும் கவலைப்படமாட்டார்கள். அவர்கள் செய்தது- மந்திரிமனையின் ஓடுகளைக் கழற்றி விற்றதும், முந்நூறு வருடப் பழமை வாய்ந்த மாமரங்கள் மூன்றினைத் தறித்து விற்றதும் தான். திருத்தப்பட்ட இந்த மந்திரிமனை - யாழப்பாணத்தின் குறிப்பாக, நல்லூரின் தொல்பொருள் களஞ்சியமாக்கப்படவேண்டும்.

*கேள்வி:-* யமுனா ஏரியும் புனருத்தாரணம் செய்யப்படுமா?

*பதில்:-* அவசியமான பணி அது. இந்த ஏரி அமைந்துள்ள காணி வண்ணை சிவன்கோவில் சொத்தெனக் கூறுகிறார்கள். ஒல்லாந்தர் சங்கிலித்தோப்பை ஏக்கர் 50 சதப்படி விற்றபோது, அது வண்ணை சிவன் கோவிலுக்காக வாங்கப்பட்டதெனத் தெரியவருகிறது.

வண்ணை சிவன் கோவில் தர்மகர்த்தாவுடன் இது குறித்து, நான் நல்லூர் பிரதேசச் செயலாளராகவிருந்தபோது பேசினேன். அவர் இதனை உரிமைமாறாது திருத்துவதில் தனக்கு ஆட்சேபனையில்லை எனத் தனது சட்டத்தரணி மூலம் அறியத்தந்துள்ளார். நல்லமனம். யாழ்ப்பாணத்தில் உறுதியில்லாத காணிகள் எல்லாம் சிதம்பரத்துக்கும், சிவன் கோவிலுக்கும் சொந்தம் என்பது வழக்கு மொழி.

*கேள்வி:-* சங்கிலித்தோப்பு தொல்லியல் அகழ்வாய்வுக்குட்படவில்லையா?

*பதில்:-* இல்லை. அது பிந்தியதுமில்லைப்போலப்படுகிறது. மாநகரசபைக் கட்டடங்கள், சிறு தொழிற்சாலைகள், குடிமனைகள், கல்விக்கந்தோர் என்பன சங்கிலித்தோப்பை ஆக்கிரமித்துள்ளன. குடிமனைக்கான அத்திவாரங்கள் வெட்டப்பட்டபோது அகழப்பட்ட சிலைகள், தொல்லியற் பொருட்கள் அத்திவாரங்களுக்குள் ளிட்டுக் கட்டப்பட்ட தகவல்கள் பலவுள்ளன.



நல்லூரிலுள்ள மந்திரிமனை. இந்த மனையின் முன்வாயில் ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்டது.

யமுனா ஏரியின் கிழக்குக் கட்டுக்கு அருகில் கட்டடம் கட்டிய கல்வித் திணைக்களம் - இன்று யமுனா ஏரிக்கட்டு உடைந்து விட்டது, எமது கட்டடத்திற்கு ஆபத்து என முறையிடுகிறது. இது வியப்பாகவும், சிரிப்பாகவும் இருக்கிறது. பழையநல்லூர்க் கோயிலின் செங்கட்டிச் சுவர்கள், அரண்மனைச் சுவர்கள் இன்றும் சங்கிலித்தோப்பில் வெளித்தெரிகின்றன. இவற்றைப் பேணுவார் யார்.

*கேள்வி:-* நிறைவாக யாது கூறுகிறீர்கள்?

பதில்:- மொழியும், கலாசாரமும் ஓர் இனத்தின் அடையாளங்கள். கலாசாரத்தின் ஓரம்சம் வரலாற்றுச் சின்னங்கள். அவை பேணப்பட வேண்டும். அவைப் பேணப்படலின் அவசியத்தை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

---

# அரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு ஜி.ரி.இசட் விசேட பயிற்சிகள்!

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு இந்த வருடம் விசேட பயிற்சிகளை வழங்குவதற்கு ஜேர்மன் தொழிற்நுட்ப நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

வடக்கு - கிழக்கில் ஒவ்வொரு மாவட்டங்களிலுமுள்ள பாடசாலைகளில் ஆரம்பப்பிரிவில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் இந்தத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இந்தத்திட்டங்கள் ஏனைய மாவட்டங்களில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றன. யாழ்ப்பாணத்திலும் கடந்த வருடம் இந்தத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதன் ஒரு கட்டமாக இந்த வருடமும் குடாநாட்டின் இந்தப் பயிற்சித்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றது. (ச)

# இரு ஆலயங்களுக்கு மின் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பிரதேசத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க இரு ஆலயங்களுக்கு மின்சாரம் வழங்கப்படவிருகின்றது. இதற்கான மின்னிணைப்பு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றது.

துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில், தொண்டமனாறு செல்வச் சந்திநிதி முருகன் கோயில் ஆகிய இரு ஆலயங்களுக்குமே மின்சாரம் வழங்கப்படவிருக்கின்றது.

இதற்கான மின்னிணைப்பு வேலைகளை ஆலயச்சூழலில் மேற்கொள்ளும் நடவடிக்கையில் மின்சாரசபை ஊழியர்கள் ஈடுபட்டுவருகின்றனர்.

## கச்சான் அலுவா தொழிற்சாலை

# சுகாதாரக் குறைபாடுகளை நீக்க நீதிமன்றம் காலக்கெடு விதிப்பு!

இனிப்புப் பண்டங்களைத் தயாரித்து விற்பனை செய்த கச்சான் அலுவாத் தொழிற்சாலையில் காணப்படுகின்ற சுகாதாரக் குறைபாடுகளை - மார்ச் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் நிவர்த்தி செய்யும் படியும், தவறினால் சம்பந்தப்பட்ட நிறுவனத்தை மூடிவிட வேண்டும் எனவும் யாழ்.மாவட்ட நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி தொழிலகத்தினர் 2003 ஆம் ஆண்டுக்கான உரிமம் பெறுவதற்காக விண்ணப்பித்தபோது - தொழிற்சாலையில் காணப்பட்ட சுகாதாரக் குறைபாடுகளைச் சீர் செய்யும்படி கால அவகாசம் வழங்கப்பட்டபோதிலும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் குறைபாடுகள் சீர் செய்யப்படாது உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. இதனையடுத்து மாநகர சபைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால யாழ். நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## மாணவர் ஒன்றிய நிர்வாகக்குழு புகைப்படம் எடுத்தல்

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய நிர்வாகசபை உறுப்பினர்களின் குழுப்புகைப்படம் இன்று மாலை 5.30 மணிக்கு எடுக்கப்படவுள்ளதால் நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு ஒன்றியத் தலைவர் அறிவித்துள்ளார்.




# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




## நடக்கும் என்பார் நடக்காது...

இன்று KINGSMEAD, DURBAN மைதானத்தில் G.M.T நேரப்படி 12.30 மணிக்கு ஆரம்பிக்கின்ற இங்கிலாந்து - இந்திய அணிகளுக்கு இடையிலான போட்டி A பிரிவில், 100 M ஓட்டப் போட்டி போன்று மிகவும் பரபரப்பாக இருக்கப்போகின்றது என்பதில் ஐயமில்லை. கடந்த சனிக்கிழமை பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் இங்கிலாந்து ஆடியபோது இந்திய கிரிக்கெட் விசிறிகள் இங்கிலாந்துக்கு தமது ஆதரவைத் தெரிவித்து மகிழ்ந்தார்கள்.


கெடிக் - வயதான காளை

ஆனால், இன்று அதே ரசிகர்கள் இங்கிலாந்தின் தோல்விக்காக இந்தியா பக்கம் நிற்கின்றார்கள். That is Cricket! இங்கிலாந்து அணி அன்று பாகிஸ்தானை மண்கவ்வ வைத்த


ஷேவாக் - இன்று ரசிகர்களிடம் தப்பமுடியாது

போது அந்த அணி பெரிதாக Batting இனை நம்பியிருக்கவில்லை. அன்ட்ரூ கெடிக், அன்டர்ஸன் ஆகிய வீரர்களுடைய நுட்பமான பந்துவீச்சு அப்ரிடி, இன்சமாம், யூசுப் யொகானா ஆகிய பாகிஸ்தான் கிரிக்கெட் நட்சத்திரங்களை பவிலியனுக்கு அனுப்பியது. பொதுவாக பாகிஸ்தான் அணி யோக்கர் பந்துவீச்சுக்குப் பெயர் பெற்றது.

அன்று இங்கிலாந்து பந்து வீச்சாளர் அன்டர்ஸன் வீசிய யோக்கர் அற்புதமானது. யோக்கருக்கே யோக்கரா? தலைவர் நஸார் ஹுசைனுடைய இறுதிக்காலம் அப்படியே தெரிகிறது. உலகக் கிண்ணப் போட்டிக்குப் பிறகு இங்கிலாந்து அணிக்குப் புதுத்தலைவர்தான். இன்று அணியின் நம்பிக்கை நட்சத்திரங்களாகிய அலெக் ஸ்ருவர்ட், வகன், கொலிங்வூட் ஆகியோருடைய துடுப்பாட்டத்தினை இந்தியா கட்டுப்படுத்தினாலொழிய இந்தியாவின் வெற்றி கேள்விக்குறிதான். இந்தியாவுக்கு ஒரு உருக்கமான வேண்டுகோள்.

நீங்கள் அண்மையில் நமீபியாவுடன் பெற்ற வெற்றி, அழுகின்ற பிள்ளைக்கு கொடுத்த 'லொலி பாப்' போன்றது. இந்தியாவின் ஆரம்ப ஆட்டக்காரர்களாகிய ஷேவாக், கங்கூலி (நம்பிக்கையில்லை) ஆகியோருடைய அதிரடித் தொடக்கம் இந்தியாவின் வெற்றிக்குப் பிள்ளையார் சுழி. அதேபோல, பல சிறுவர்கள் இந்திய அணியில் உள்ளார்கள். அவர்களும் கிட்டிப்புள் அடிக்காமல் கிரிக்கெட் அடிக்க வேண்டும்.

இந்திய அணியின் சுழல் பந்து வீச்சாளர்கள் இருவரும் இன்று பயன்படமாட்டார்கள். கும்ளே ஓரளவு வீசினாலும், ஹர்பஜனுடைய பந்துவீச்சுக்கு இன்று சூரசம்ஹாரம்தான். ஷாகிர்கான்தான் இன்று இங்கிலாநது அணிக்கு முதல் எதிரி. இந்திய அணியின் பரம எதிரியான (கிரிக்கெட்டில் மட்டுமல்ல) பாகிஸ்தான் அணியினை, பல ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி கண்ட இங்கிலாந்தின் பலம், நமீபியாவை வெற்றிகண்டு மோதப்போகும் இந்தியாவுடன் எடுபடுமா?


இங்கிலாந்து அணியைப் பொறுத்தவரை Super Six க்குள் நுழைவது என்ற ஒளி பிரகாசமாக உள்ளது. ஆனால், இந்தியாவுக்கு கடும் பிரயத்தனமாகவே காணப்படுகின்றது. இன்று, இந்திய அணியின் டெண்டுல்கர் பெரிதாக எதிர்பார்க்கப்படுகின்றார்.

இன்று நாணயச் சுழற்சியில் வெற்றிபெறும் அணி முதலில் துடுப்பெடுத்தாடுவது நல்லது. ஏனெனில், பகல் இரவுப் போட்டிகளில், இரண்டாவது துடுப்பாட்டம் அவ்வளவாகச் சோபிக்கப்போவதில்லை.

இன்றைய போட்டியின் மத்தியஸ்தர்களாக,

1) RE.KOERTZEN ( GROUND )
2) SJA.TAUFEL ( GROUND )
3) EAR. DE SILVA ( TV )
4) S.WADVALLA ( FOURTH )

ஆகியோர் கடமையாற்றுகிறார்


ஷாகிர்கான் - உன்னை மட்டும் நம்பி

கள். போட்டி நடுவராக RS.MADUGALLE கடமையாற்றுகிறார். எது எப்படியிருந்தாலும் ஒன்று நிச்சயம். Good Bye India! or Bad luck England!

- பஞ்சநாதன் சுதர்சன் -

## லாறா, சச்சின் - ஓட்டம் குவிக்க ஒப்பந்தமா?


சச்சின் - இரட்டைச் சதத்தை நோக்கி...

மேற்கிந்தியத் தீவுகள் - கனடா ஆட்டத்தில் பல சுவாரஸ்யங்கள். துடுப்பெடுத்தாடும்படி அழைப்புவிடுத்த Windies, ஒரு 40 அல்லது 50 ஓட்டங்களுக்குள் மடக்கலாம் என்று நினைத்து ஏமாந்துபோனார்கள். கனடாவின் ஜோன் மைக்கல் டேவிசன் 111 ஓட்டங்கள். 67 பந்துகளில் அதுவும் சதம் போட்டு அல்லாட வைத்துவிட்டார். டேவிசன் கனடாவின் வீரர் என்பதற்குப் பின்னால், இன்னொரு கதையுண்டு. இவர் அவுஸ்திரேலியாவின் விக்ரோறியா மற்றும் சவுத் ஒஸ்ரேலிய அணிகளுக்காக விளையாடியவர். கனடியக் கழகங்களின் பயிற்றுநர். 2002/03 பருவத்தில் சவுத் ஒஸ்ரேலியாவுக்காக விளையாடப் போகிறவர். அவர் பிரதிநிதித்துவம் வகிக்கும் நாடு பலமற்றது. அவர் பலமற்றவர் அல்லர். மறுபுறம் கனடாவின் 202 ஓட்டங்களுக்குப் பதிலாக மேற்கிந்தியர்கள் சராசரி 10 ஓட்டங்கள் குவித்துத் தம்மை நிரூபித்துக் கொண்டார்கள். இதில் லாறா 73 (40), ஹின்ட்ஸ் 64 (31). வெற்றி ஏழு விக்கெட்டுக்களால்.



லாறா - சதத்தின் மீது காதல்

இன்னொரு ஆட்டம் இந்திய - நமீபிய அணிகளுக்கிடையில் நடைபெற்றது. இந்தியாவுக்கு இரண்டாவது வெற்றி என்பதுடன், தன்னம்பிக்கை வளர்த்த ஆட்டமும் கூட. கங்கூலி, சச்சின் இருவரும் சதம் போட்டது ஆட்டத்தின் சிறப்பு. 151 பந்துகளில் 152 அடித்த சச்சின், அப்படியொரு முறையில் Out ஆகியிருக்க வேண்டாம். பலம் குறைந்த அணியுடன் என்றாலும் தகுதியான வெற்றி.

நர்மதா

## ஒட்டினோ ஒபுயாவுக்கு ஓ போடு

இலங்கை அணி தமது உலகக் கிண்ண ஆரம்பப் போட்டியில் நியூசிலாந்துடனான ஆட்டத்தில் வெற்றி, அதுவன்றி வேறேதும் இல்லை.

எதிர் அணிக்குச் சோதனை தமக்குப் பல சாதனைகள் என்றவாறு, முன்னணியில் உள்ள அவுஸ்திரேலியாவுக்கு அடுத்தபடியான நிலையில் இருந்தவர்கள் இலங்கை அணியினர். இதுவெல்லாம் கென்யாவுக்குச் செல்லும்வரைதான். கென்ய ரசிகர்களுக்குத் தம் மண்ணில் காணக் கிடைத்த ஒரேயொரு ஆட்டம் இலங்கை - கென்ய ஆட்டம்தான். இந்த ஆட்டத்தில் இலங்கை வெல்வதென்பது அவ்வளவு சர்ச்சைக்குரிய விடயமாக இருக்கவில்லை. இரண்டு சந்தர்ப்பங்களில் கென்யாவுக்கு இலங்கை அடித்த 'தலையடி' இந்த ஆட்டத்தின முடிவுக்குப் பலம் சேர்ப்பதாகவே இருந்திருக்கும்.

கென்ய அணி வீரர்கள் தமது ஒருங்கிணைந்த செயற்பாட்டின் மூலம் விதியையே மாற்றியமைத்தார்கள். கென்யா முதலில் துடுப்பெடுத்தாடியபோதும், ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஒட்டினோ பெற்றுக் கொண்ட 60 ஓட்டங்களை விட்டால் தனிநபர் எண்ணிக்கைகள் குறைவுதான். மொத்த ஓட்ட எண்ணிக்கையே 210/9 தான். இது இலங்கை அணிக்கு ஒரு பெரிய வெற்றி இலக்கே அல்ல என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்


ஒட்டினோ - பழிக்குப் பழி

வில்லை. அதையிட்டு கென்ய அணிகளுக்கும் சந்தேகம் இருக்கவில்லை. ஆனால், இலங்கையை வீழ்த்துவோம் என்பது, இலங்கை துடுப்பெடுத்தாட ஆரம்பித்ததுமதான் தெரிய வந்தது. அணித் தலைவர் ஜயசூரியவை அகற்ற படடேல் எடுத்த அற்புதமான பிடியுடன் பிரளயம் ஆரம்பமாயிற்று. இறுதியில் தில்ஹார, மிக அவசியப்பட்ட ரிவேர்ஸ் ஷொட் பாணியை பின்பற்றிக் கவிழ, இலங்கை அணிக்கு இறுதி ஆணி அடிக்கப் பட்டது.

இலங்கை அணி பல நியாயங்கள் கூறக்கூடும். ஆனால், இவை எதுவும் கென்ய அணியின் வெற்றியின் பெருமையை எவ்விதத்திலும் குறைக்க முடியாது. எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இலங்கைத் துடுப்பாட்ட வீரர்களால் கென்ய அணிக்கு எவ்வித அழுத்தத்தையும் கொடுக்க முடியவில்லை. இதேவேளை, இலங்கை அணி வீரர்கள் தலைதூக்க கென்யா விடவும் இல்லை. அவர்களின் களத்தடுப்பு, அவர்கள் எடுத்த பிடிகள், சிறப்பாக, ஒபுயாவின் பந்துவீச்செல்லாம் இலங்கை அணிக்கு பல இரவுகள் நித்திரையைக் குழப்பிக்கொண்டே இருக்கும். கென்ய மக்களின் ஆட்டம், பாட்டங்கள், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கென்ய அணி வீரர்கள் ஒன்றுகுவிந்து மிக நெருக்கமாக சுற்றிச்சுற்றி ஆடியது (Hudding), பார்வையாளர்கள் கொடுத்த உற்சாகம் எல்லாம் அப்படியே தனியாக வெளித் தெரிந்தன. இவற்றுக்கு முன்னால்

ஜோசப் கிருஷ்ணா

இலங்கை அணி எங்கே என்றே தெரியாமற்போனது.

இலங்கை அணி எவ்வித மறுப்பும, நொண்டிச்சாட்டுக்களும் கூறாமல் மிகவிருப்பத்துடன் கென்யாவுக்குச் சென்றதை கென்ய மக்கள் என்றும் நன்றியுடன் நினைவு கூருவார்கள். அதேபோல தம்மைப் பலமாக நசுக்கிய ஒரு கிரிக்கெட் எதிரியை தம் மண்ணில் வைத்து மெல்ல மெல்ல Mercy Murder செய்த கென்ய அணி வீரர்களையும் நீண்ட காலம் நினைவில் வைத்திருப்பார்கள். Black Power.

## நேற்று 500 ஆவது விக்கெட் வீழ்த்திய அக்ரமின் ஆரவாரங்கள்....




## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

### பாகிஸ்தான் வென்றது நெதர்லாந்து அணியை.

**பாகிஸ்தான் அணி**

| | | |
|---|---|---|
| உமர் | run out | 48 |
| அன்வர் | C எஸ்மியர் b லீட் | 25 |
| றஸாக் | C ஸ்மித் b பங்க் | 47 |
| இன்ஸமாம் | LBW b லீட் | 00 |
| யொகானா | b லெ∴வ்பர் | 58 |
| எலாஹி | C ஜீயூடெறன்ற் b பங்க் | 05 |
| லத்தீவ் | C பங்க் b ஷீவெர்லி | 24 |
| அக்ரம் | run out | 01 |
| அக்தர் | not out | 26 |
| வக்கார் | C&b மோல் | 01 |
| முஷ்டாக் | not out | 03 |
| உதிரிகள் | | 15 |
| 9 விக்கெட்டுக்களை இழந்து (50 ஓவர்கள்) | | 253 |

**நெதர்லாந்து அணி**

| | | |
|---|---|---|
| ஸ்டதம் | b அக்ரம் | 00 |
| ஷீவெர்லி | C றஸாக் b அக்தர் | 09 |
| ஜீயூடெறன்ற் | LBW b வக்கார் | 08 |
| நூர்விஜ்க் | C லத்தீவ் b அக்ரம் | 07 |
| லீட் | C அக்தர் b முஷ்டாக் | 15 |
| பங்க் | C லத்தீவ் b றஸாக் | 31 |
| வான் | C லத்தீவ் b அக்தர் | 22 |
| மோல் | b அக்தர் | 13 |
| எஸ்மியர் | LBW b அன்வர் | 00 |
| லெ∴வ்பர் | not out | 04 |
| ஸ்மித் | LBW b அக்ரம் | 07 |
| உதிரிகள் | | 40 |
| சகல விக்கெட்டுக்களும் இழந்து (39.3 ஓவர்கள்) | | 156 |

**பந்து வீச்சு - நெதர்லாந்து அணி**

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| ஷீவெர்லி | 10 | 1 | 48 | 1 |
| லெ∴வ்பர் | 10 | 1 | 39 | 1 |
| லீட் | 10 | 0 | 53 | 2 |
| வான் | 02 | 0 | 18 | 0 |
| எஸ்மியர் | 10 | 0 | 35 | 0 |
| பங்க் | 4 | 0 | 27 | 2 |
| மோல் | 4 | 0 | 24 | 1 |

**பந்து வீச்சு - பாகிஸ்தான் அணி**

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| அக்ரம் | 8.3 | 2 | 24 | 3 |
| அக்தர் | 7 | 0 | 26 | 3 |
| வக்கார் | 6 | 1 | 19 | 1 |
| முஷ்டாக் | 8 | 2 | 32 | 1 |
| றஸாக் | 6 | 0 | 23 | 1 |
| அன்வர் | 4 | 0 | 15 | 1 |

## நாளும் ஒரு வினா

அக்தர் ஓர் ஆட்டத்தில் ஏற்படுத்திய இரண்டு சாதனைகள் யாவை?

100 MPH என்ற வேகத்தைக் கடந்த பந்துவீச்சு.
16 பந்துகளில் 43 ஓட்டங்கள்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# நிபந்தனைகளுடன் ஜே.வி.பி. சுதந்திரக் கட்சிக்கு ஆதரவு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கும் மக்கள் விடுதலை முன்னணியினருக்கும் இடையில் ஐந்து கட்டங்களாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளன.

நேற்று நடைபெற்ற ஐந்தாவது கட்டப் பேச்சுவார்த்தைகளின்போது, மக்கள் விடுதலை முன்னணி - சில நிபந்தனைகளின் அடிப்படையில் - தேசிய இனப்பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை, அரச சேவைகள் என்பவை தொடர்பில் தாம் சுதந்திரக் கட்சியினருடன் இணக்கம் கண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட வேண்டும், தமிழீழக் கோரிக்கையினைக் கைவிட வேண்டும், உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர்த்த வேண்டுமாயின் விடுதலைப் புலிகள் கனரக ஆயுதங்களையாவது கைவிட வேண்டும் என்பவை உட்பட 5 நிபந்தனைகளை விதித்திருப்பதாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை - நேற்றைய சந்திப்பின்போது ஜனாதிபதி நாட்டில் இல்லாததால், மீண்டும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இரு கட்சிகளும் சந்தித்து தாம் கண்டுள்ள இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்த உள்ளன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இணக்கப்பாட்டின் அடிப்படையில் மார்ச் மாத இறுதியில் இரு கட்சிகளும் ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கவும் திட்டமிட்டுள்ளன. (01)

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003
## இன்றைய ஆட்டம்

ICC Cricket World Cup

இங்கிலாந்து Vs இந்தியா - KINGSMEAD, DURBAN - 6.30 pm. D/N
நியூசிலாந்து Vs பங்களாதேஷ் DE BEERS DIAMOND OVAL KIMBERLY 2. pm

# சமாதான விரோதிகளுக்கு இடமளியாதிருங்கள்!

## ஊடகங்களுக்கு பிரதமர் கோரிக்கை


ஊடக சுதந்திரம் மேலும் உறுதிப்படுத்தப்படவுள்ளது. அதன் மூலம் ஊடகங்கள் பொறுப்புணர்ச்சியோடும் உரிமையோடும் செயற்பட முடியும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சியைக் குழப்பும் தீயசக்திகளுக்கு ஊடகங்கள் இடமளிக்கக் கூடாது என்றும் பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் பத்திரிகையாளர் சங்க மாநாடு நேற்றிரவு கொழும்பு ட்ரான்ஸ் ஏசியா ஹோட்டலில் நடைபெற்றது. அங்கு பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, பிரதமர் உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

இந்த மாநாட்டில் பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகள் , பத்திரிகையாசிரியர்கள் மற்றும் ராஜதந்திரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். அங்கு தொடர்ந்து உரையாற்றிய பிரதமர், அரசியல்வாதிகள் அல்லது அரசியல் கட்சிகள் தேர்தல் காலங்களில் பொய்யான வாக்குறுதிகளை வழங்குகினறனர் . நடைமுறைப்படுத்த முடியாத வேலைத்திட்டங்களை முன்வைக்கின்றனர். அதனை ஊடகங்களும் பிரசுரிக்கின்றன என்று தெரிவித்த பிரதமர், தேர்தல் காலம் முடிந்ததும் அந்த வாக்குறுதிகள் கைவிடப்படுகின்றன என்றும் கூறினார்.

# யாழ். யோசப் வாஸ் ஆலயம் அதிமேற்றிராணியாரால் திறப்பு



கொட்டடியில் புதிதாக அமைக்கப்பட்ட புனித யோசப் வாஸ் ஆலயம் நேற்று மாலை 5 மணியளவில் அதிமேற்றிராணியார் பேரருட்திரு ஒஸ்வால் கோமிஸ் ஆண்டகையினால் திறந்து வைக்கப்பட்டது.

இலங்கையின் ஒன்பது மாவட்டங்களைச் சேர்ந்த ஆயர்களும் பான்ட் வாத்திய இசையுடன் ஆலயத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

இலங்கை அதிமேற்றிராணியார், முத்திப்பேறுபெற்ற புனித யோசப்வாஸ் ஆலயத்தை திறந்து வைத்ததுடன், நினைவுக் கல்லையும் திரை நீக்கம் செய்து வைத்தார். பின்னர், கண்டி மறைமாவட்ட ஆயர் பெர்ணான்டோ தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதன்போது பல குருக்களும், துறவியரும், மக்களும் கலந்துகொண்டனர். (க,லி,60)

# மரண அறிவித்தல்

## ஐயம்பிள்ளை சின்னார்

நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த ஐயம்பிள்ளை சின்னார் நேற்று (25-02-2003) சிவபதம் அடைந்து விட்டார். அன்னார் வள்ளியம்மையின் அன்புக்கணவரும் கனகராசா (முத்தையன்கட்டு), நல்லம்மா (நெடுந்தீவு), இராசலிங்கம் (ஜேர்மனி), பரமேஸ்வரி (பிரான்ஸ்), தருமரத்தினம் (சுவிஸ்), நாகேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தந்தையும் செல்லம்மா (முத்தையன்கட்டு), தருமரத்தினம் (நெடுந்தீவு), ஞானேஸ்வரி (ஜேர்மனி), தங்கராசா (பிரான்ஸ்), செல்வி (சுவிஸ்), ஜெயா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் - சந்திரன், இந்திரன், ரூபன், உமா, ரவி, கிருபா, கவி, கார்த்திகா, கௌரி, லதா, மஞ்சுளா, சுமித்தா, சுகந்தன், சசி, கரன், கலா, கண்ணா, கிருஸ்ணா, குமார், அப்பன் ஆகியோரின் அன்புப் பேரனும் நாகதீபன், நிதர்ஷனி ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியை மாலை 5 மணிக்கு நெடுந்தீவு மேற்கு இந்து மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*தகவல்:-*
*த.தருமரத்தினம் (மருமகன்),*
*நெடுந்தீவு.*

(259)

## ஹெலியினால் மின்தடை

(நெடுந்தீவு)

கடந்த ஞாயிறு நெடுந்தீவுக்கு விஜயம் செய்த அமைச்சர் குழுவினரை ஏற்றிச்செல்லவந்த உலங்கு வானூர்திகளின் காற்று விசையினால், தென்னை ஒன்று முறிந்து வீழ்ந்து மின் கம்பிகளைச் சேதப்படுத்தியது.

இதனால், அன்று முதல் நெடுந்தீவுக்கான மின்விநியோகம் தடைப்பட்டுள்ளது.

## திருமலைக்கு தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

இன்றும் நாளையும் திருமலையில் நடைபெறும் சிறான் கூட்டத்தில் கலந்துகொள்ள அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் திருமலை செல்லவுள்ளார்.

இவருடன் பாலகுமாரன் மற்றும் சிறான் அதிகாரிகளும் கிளிநொச்சியிலிருந்து திருமலை செல்கின்றனர்.

### அர்ப்பணிப்பு...

என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். எம்மைப் பலவீனப்படுத்த எதிரிகள் எப்படியெல்லாம் முயன்ற போதும், தலைவரினதும் போராளிகளினதும் உறுதிப்பாடும் அர்ப்பணிப்பும் எம்மை இன்று உலக அரங்கில் தலைநிமிர வைத்துள்ளது எனக் குறிப்பிட்டார்.

### நெருக்கடிகளை...

மனிதாபிமான அடிப்படையில் தாம் தடுத்து வைத்திருப்போரை விடுதலை செய்யப்போவதாக அரசாங்கம் அறிவித்திருந்தாலும், விடுதலைப் புலிகள் தரப்பில் இன்னமும் பதில் கிடைக்கவில்லை எனக் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்தனர்.

இதே சமயம் - விடுதலைப் புலிகளால் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இராணுவச் சிப்பாயையும், பொலிஸ் உத்தியோகத்தரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

அததுடன், இது தொடர்பாக கிளிநொச்சியில் சமாதானச் செயலணியின் செயலாளர் புலித்தேவனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, திருகோணமலை திரியாய் பகுதியில் ஆயுதங்களுடன் கைதான விடுதலைப் புலி உறுப்பினர்கள் ஏழு பேர் விடுதலை செய்யப்பட்டது பற்றி, அரசுக்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிவித்துள்ளது. அதேபோன்று, விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாதுகாப்புப்படையினரை விடுதலை செய்யவேண்டிய அவசியம் குறித்து அரசாங்கம் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அறிவித்ததாக ஒஸ்ரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

பிந்திய தகவல்களின்படி - நேற்று மாலை விடுதலைப் புலிகள் தாம் தடுத்து வைத்திருக்கும் இராணுவம், பொலிஸ் உத்தியோகத்தர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தமக்கு உறுதியளித்துள்ளனர் என போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# சமஷ்டித் தீர்வுக்குக் குழு; பௌத்த பீடாதிபதி அமைப்பு

வட - கிழக்குப் பிரச்சினைக்கு சமஷ்டி முறை மூலம் தீர்வுகாண்பது தொடர்பாக, விசாரணை ஆணைக்குழு ஒன்றை மல்வத்த பீடாதிபதி ரம்புக்வெல விபஸிதேரர் அமைத்துள்ளார்.

முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி ஆர்.எஸ்.வணசுந்தர தலைமையில் இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. சமஷ்டி முறைத் தீர்வு தொடர்பாக விசாரணை செய்து தமக்கு முழு அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு மல்வத்த பீடாதிபதி இக் குழுவைக் கேட்டுள்ளார்.

ஊடகங்களில் குழப்பமான தகவல்கள் வெளிவந்ததால், சமஷ்டி குறித்து பொருத்தமான விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளவே மல்வத்த பீடாதிபதி இந்த ஆணைக் குழுவை நியமித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழுவில் முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி வலப்புட்டிய, டக்ளஸ் பிரேமரட்ண, கலாநிதி பியசேன உள்ளிட்ட பலர் இடம்பெற்றுள்ளனர். விரைவில் இந்த ஆணைக்குழு செயற்படவுள்ளது.

### காங்கேசன்....

ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நடைபெறவுள்ளது. இதன்போது பொது மக்கள் அங்கு செல்வதற்கு அனுமதி வழங்க யாழ். தளபதி சம்மதம் தெரிவித்தார்.

### செய்தியாளர்களுக்கு....

இங்கு ஊடகவியலாளரை அனுமதிப்பதில்லை என முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அத்துடன், பேச்சுவார்த்தையில் பங்குபற்றும் பிரதிநிதிகள் தங்கியிருக்கும் சகுரா (SAKURA) என்ற விடுதியின் பிரதான தங்குமறையிலும் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் பிரதிநிதிகளைத் தவிர வேறொருவரையும் அனுமதிப்பதில்லை என முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இதேவேளை- பேச்சுக்கள் நடக்கவுள்ள பகுதி மலைகள் சூழ்ந்த பிரதேசம் என்றும் ஊடகவியலாளர்கள் ரோக்கியோவிலிருந்து 20 நிமிடத்தில் இந்த இடத்துக்குச் செல்லலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### ஒரே கொடியின்...

விளையாட்டு வீரர்கள் - இங்கு தம்முடன் போராளிகளும், பொது மக்களும் நடந்துகொண்டமுறை பற்றி வியந்தது பற்றிக் குறிப்பிட்ட அவர், சிறப்பான விருந்தோம்பும் பண்பும், நட்பு நிறைந்த கலாசாரமும் கொண்ட இந்த மக்களுக்கு அழிவைச் செய்ய முயற்சிக்கப்பட்டது ஏன் என அவர்கள் மனம் வருந்தியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### யாழ்.தளபதி..

செல்வனை நாம் சந்தித்த பொழுது அவர்களது தற்போதைய நிலை குறித்து அறிந்துகொள்ள முடிந்தது. அதேபோல், யாழ். இராணுவத் தளபதியைச் சந்தித்தபோது படைத்தரப்பின் தற்போதைய நிலை குறித்துத் தெரிந்துகொள்ள முடிந்தது என்று, மேற்படி சந்திப்பின் முடிவில் கருத்து வெளியிட்ட கொழும்பு மறைமாவட்டப் பேராயர் ஒஸ்வால் கோமிஸ் தெரிவித்தார்.

மேற்படி சந்திப்புக் குறித்து எதுவித கருத்தையும் தெரிவிக்க யாழ். ஆயர் மறுத்துவிட்டார். இது மரியாதையின் நிமித்தமான சந்திப்பு என்று குருநாகல் மறைமாவட்ட ஆயர் தெரிவித்தார். (க,லி)

### வெற்றிக்கிண்ணங்களை...

மும் லெப். கேணல் விக்ரரின் திருவுருவப் படத்திற்கு மட்டு. மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி ஈஸ்வரனும், மேஜர் சோதியாவின் திருவுருவப் படத்திற்கு கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் பிரிவு விளையாட்டு அதிகாரி குமாரும், மேஜர் அல்பேட்டின் திருவுருவப் படத்திற்கு பரம்சோதியும் ஈகச் சுடரினை ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து மட்டக்களப்பு - திருகோணமலை அணிகளுக்கிடையிலான இருபது ஓவர்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இதன்போது முதலில் திருகோணமலை அணியினர் துடுப்பெடுத்தாடினார்கள். இவர்கள் இருபது ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து எழுபது ஓட்டங்களைப் பெற்றனர்.

பின்னர் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு அணியினர் 17.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதனால் பதினெட்டு ஓட்டங்களினால் திருகோணமலை அணியினர் வெற்றிபெற்று கேணல் சங்கர் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்தைப் பெற்றுக் கொண்டனர்.

பின்னர் 4 மணியளவில் திருகோணமலை - மன்னார் அணிகளுக்கிடையிலான இறுதி உதைபந்தாட்டப் போட்டி இடம்பெற்றது. இதன்போது 1:0 என்ற கோல் கணக்கில் திருகோணமலை அணி வெற்றி கொண்டது. இதனால் லெப். கேணல் விக்ரர் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்தை திருகோணமலை அணி கைப்பற்றியது.

கிளிநொச்சியில் நடைபெற்று முடிந்த தமிழீழ தேசிய விளையாட்டு விழாவின் இறுதிநாளான நேற்று ஒவ்வொரு விளையாட்டுப் பிரிவிலும் சிறப்பு ஆட்டக்காரர்கள் தெரிவாகினர். இதன்படி - கரப்பந்தாட்டத்தில் யாழ். அணியின் கமலேந்திரன் மகீதரன், வலைப்பந்தாட்டத்தில் திருச்செல்வம் சங்கீதா ஆகியோர் தெரிவாகி தங்கப்பதக்கம் பெற்றனர்.

உதைபந்தாட்டப் பிரிவில் திருமலை அணியின் தர்மபாலன் சாள்ஸ் வசந்தன், துடுப்பாட்டத்தில் திருமலை அணியின் அப்துல் முத்தலிப் ஹரீஸ் ஆகியோர் சிறப்பாட்டக்காரர்களாகத் தெரிவாகினர்.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான விருதுகளை மாலதி படையணியின் சிறப்புத் தளபதி கேணல் விதுஷா, லெப்.கேணல் வீமன், கிளிநொச்சி அரச அதிபர், விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, வட - கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை உதவிப்பணிப்பாளர் விமலராஜன், பயிற்றுநர் றொஹான் ராஜசிங்கம், திரைப்பட வெளியீட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் ராதா, மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் லெப்.கேணல் றேகா, மருத்துவப் பிரிவைச் சேர்ந்த லெப.கேணல் மனோஜ், நல்லூர் பிரதேசப் பொறுப்பாளர் ஈஸ்வரன், யாழ். மாவட்ட அரசியற்துறை மகளிர்ப் பொறுப்பாளர் முகுந்தா ஆகியோர் வழங்கினர்.(லி)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 26.02.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.